பக்கங்கள்-16 19.மார்.2023 விலை–50.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –403



## பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார்! இறந்துவிட்டார்!
# யார் சொல்வது உண்மை?



# காவி உடை அணிந்த பௌத்த பயங்கரவாதிகள்

பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்



# உள்ளூராட்சி மன்ற தேர்தல் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்காது

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-



# பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார்! இறந்துவிட்டார்!

# யார் சொல்வது உண்மை?




தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருப்பதாக இந்தியாவில் இருக்கின்ற அண்ணன் பழ. நெடுமாறன் அவர்கள் ஊடகவாயிலாக கருத்து தெரிவித்திருக்கின்றார். அது இன்று உலகளாவிய ரீதியிலே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. உண்மையிலே விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருக்கின்றார் அல்லது இல்லை என்ற நடவடிக்கைகள் கடந்த காலத்தில் இருந்தே கூறப்பட்டு வந்தது. இருந்தும் 2009க்கு பின்னர் அவர் தலைமறைவாகி இருக்கலாம் என கூறப்பட்டு அடுத்தடுத்து வருகின்ற மாவீரர் நிகழ்வுகளிலே பிரபாகரன் உரையாற்றுவார் என்ற எண்ணங்களும் நப்பாசைகளும் மக்கள் மனதில் இருந்து கொண்டு தான் இருக்கின்றன. இன்றும் பல அரசியல் தலைவர்கள் பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்ற அவர்களின் சந்தேகம் கூட வலுப்பெறுகின்றது. உண்மையாகவே இந்த சந்தேகங்கள் பிரபாகரன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதற்கான விளக்கங்களை சரியான ஆதாரபூர்வமாக இலங்கை அரசாங்கம் வெளியிடாத காரணத்தினால் இன்றும் அதுவொரு மறை பொருளாகவே மக்கள் மத்தியில் இருக்கின்றது.

எனவே எவர் கூறினாலும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இருக்கின்றார் அவர் வருவார் என்ற நிலைப்பாடுகளை கூறுவதற்குரிய காரணங்களை இலங்கை அரசு ஏற்படுத்தியிருக்கின்றது என்பதனால் தான் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். இருந்தும் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் பலர் ஈழப்போரின் இறுதியில் கொல்லப்பட்ட காணொளிகளை காட்டியிருந்தார்கள். சரணடைந்த போராளிகளின் உருவப்படங்களையும் காட்டியிருந்தார்கள். மிக மோசமான முறைகளில் அவர்கள் கொலை செய்யப்பட்ட விதங்கள். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உடலையும் காட்டினார்கள்.

ஆனால் அந்த உடல் சசி மாஸ்டரின் உடலாக இருந்தது என்று கூறப்படுகின்றது. அவரைப் போன்ற உருவத்தில் இருக்கும் வேறு ஒருவரைக் காட்டினார்கள் என்று கூறப்பட்டிருந்தது. இவ்வாறு பிரபாகரனைப் போன்று ஏழு போராளிகள் இருந்தார்கள் அவர்களில் ஒருவரது உடலைத் தான் இவர்கள் காட்டினார்கள் என்றும் கூட கூறப்பட்டது. விமல் மாஸ்டர் கூட பிரபாகரனுக்கு ஒத்த உருவத்தில் தான் இருந்தார் என்றும் கூட கூறப்பட்டு அப்பொழுது படங்களும் வெளியிடப்பட்டிருந்தது.

எனவே இந்தியா ஒருவேளை தனக்கு சாதகமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசியல் ரீதியாக பாவிக்கப்படுகின்ற ஒரு உத்தியாக இதனை ஒரு தரப்பு பார்க்கின்றது. மறுபுறத்தில் பார்த்தால் உண்மையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் அல்லது இருப்பாராக இருந்தால் ஏன் அவர் இதுவரை காலமும் மக்கள் மத்தியில் ஒரு டிஜிட்டல் ரீதியில் கூட பேசி காணொளிகளை வெளியிடவில்லை என்ற கேள்விகளும் இருக்கின்றது.

மறுபுறத்திலே 1500 போராளிகளுக்கு மேல் தப்பி வெளிநாடுகளுக்கு சென்றிருந்த பொழுது ஏன் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் தப்பிச்செல்ல வாய்ப்புக்கள் இல்லை என்ற கேள்விக்கும் அரசாங்கத்தினால் பதில் சொல்ல முடியாத நிலை தான் உள்ளது. ஆனால் அவர் இந்த மண்ணில் போராடி உயிர்த்தியாகம் செய்திருப்பார் என்றும் ஒருசிலர் கூறுகின்றார்கள். விடுதலைப்புலிகளில் இருந்த கருணா அவர்கள் தெரிவித்த கருத்தின்படி பார்த்தால் அவர் தன்னைத்தானே குறித்த பிஸ்டலினால்(டொக்காரா) தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகின்றது. இது போன்று பல போராளிகள் அவர் பிடிபடுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று கூறுகின்றார்கள். இராணுவம் அவரைப் பிடித்து தான் கொலை செய்தது என ஒரு தரப்பு கூறுகின்றது. இறுதிக்கட்டத்திலே இவர்களால் எடுக்கப்பட்டு வெளியிடப்பட்ட பல காணொளிகள் இருக்கின்றன. உண்மையிலே இவர்கள் பிரபாகரனைப் பிடித்து சுட்டிருந்தார்கள். என்றால் அவ்வாறானதொரு காணொளிகள் இருந்திருந்தால் இவற்றை இலங்கை டீவி சனல்களில் போட்டுக்காட்டுவதன் ஊடாக பிரபாகரன் அவர்கள் இறந்துவிட்டார் என்பதனை உறுதிப்படுத்துவதாக இருக்கும். அதற்கான மரண சான்றிதழ் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. அரசாங்கம் எதற்காக மரண சான்றிதழை வழங்க வேண்டும் என்று ஒரு பக்கம் கூறப்படுகின்றது. இவ்வாறெல்லாம் பல சர்ச்சைகள் இருக்கும் இந்த கட்டத்தில் தான் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்ற நிலைப்பாடு தற்பொழுது தோற்றுவிக்கப்பட்டுள்ளது.




2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரபாகரனின் உடல் எரிக்கப்பட்டதா? அல்லது புதைக்கப்பட்டதா? என்பதனை எமது தினப்புயல் பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் தலைவர் அவர்கள் பாவித்த டொக்காரா பிஸ்டல் பிடிபடவில்லை 9.M துப்பாக்கியைத் தான் அவர்கள் போட்டிருந்தார்கள். எனவே பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருப்பதற்கு அவரது கைத்துப்பாக்கி அதனை ஆதாரப்படுத்துகின்றது என்றும் கூட நாங்கள் அந்த பத்திரிகைத் தாளிலே குறிப்பிட்டிருந்தோம். அந்த பத்திரிகை வெளியிடப்பட்ட காலத்திலும் பல சர்ச்சைகள் ஏற்பட்டது. ஆனால் அதற்கான காரணங்களை நாங்கள் தெளிவாக கூறியிருந்தோம் இவரது பிஸ்டல் எங்கே என்பது தான் எமது விவாதமாக இருந்தது. அது போன்று அந்த கட்டுரையை பாகம் 1, பாகம் 2, பாகம் 3 என பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். மற்றும் தப்பிச் செல்வதற்கான 30 காரணங்கள் எதுவாக இருக்கும் என்பதனையும் நாங்கள் வெளியிட்டிருந்தோம். எனவே இவற்றையெல்லாம் வைத்து பார்த்தால் ஒரு சந்தேகம் நிலவுகின்றது பிரபாகரன் நிச்சயமாக உயிருடன் இருப்பார் என்பதற்கான ஆதாரங்கள் தான் இவை என கூறப்படுகின்றது. ஆனால் இல்லை என்பதற்கான காரணங்கள் வெகுவாரியாக இல்லை காரணம் என்னவென்றால் அவரது உடலைக் காட்டவில்லை. இறந்த பின் உங்களுடைய கையையோ காலையோ இலகுவில் நிமிர்த்தி விட முடியாது ஆனால் தலைப்பகுதி கைப்பகுதி எல்லாவற்றையும் ஆட்டுகின்ற திசை எங்கும் ஆடுகின்றது அது எப்படி விஞ்ஞான ரீதியில் நிரூபித்தாலும் கூட அது இயலாத காரியம் 24 மணித்தியாலயத்தில் அவ்வாறு விரைப்பு தன்மை ஏற்பட்டுவிடும். 16,17ஆம் திகதிகளில் இராணுவ தாக்குதலில் இறந்து விட்டார். ஆனால் அவருடைய உடல் 18ஆம் திகதி தான் கண்டெடுக்கப்பட்டதாக சொல்லப்படுகின்றது. இவர் தான் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு இரண்டு நாட்கள் தேவைப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. கருத்துக்கள் எவ்வாறிருப்பினும் தற்பொழுது இருக்கும் சூழ்நிலையில் விடுதலைப்புலிகளினது ஆரம்ப போராளியாக காடுகளில் இருந்து ஆயுதங்களை வழங்கிக்கொண்டிருந்த பழ. நெடுமாறன் அவர்கள் இந்த கருத்தை தெரிவித்திருப்பதானது உண்மையில் இந்தியாவினுடைய ரோவினுடைய திட்டம் என்று கூட கருதப்படுகின்றது. ஏனென்றால் ஒரு குழப்ப சூழ்நிலையை உருவாக்கி அதில் குறிப்பாக இந்தியாவில் அவர் இருப்பாராக இருந்தால் இதை விட நிலைமை மிக மோசமாக இருக்கும். அதாவது ஆரம்ப கால கட்டத்திலே இந்தியாவிலே தான் விடுதலைப்புலிகளுக்கும் ஏனைய ஆயுத போராட்டங்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டு பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.

மீண்டும் அவ்வாறான ஒரு பயிற்சி நடவடிக்கை அங்கு இடம்பெறுமா? என்ற விடங்களைக்கூட ஆராய வேண்டிய சூழல் உருவாகியிருக்கும். அதுமட்டுமன்றி இங்கிருக்கக்கூடிய இராணுவ புலனாய்வு கட்டமைப்பு NIB,TID, CID போன்றவர்களுக்கும் இந்த அறிவிப்பு ஏற்பட்டதன் பின்னர் ஒரு பாரிய நெருக்கடி நிலைமை உருவாகும் இவர்களும் பல விடயங்களை தேட வேண்டிய சூழல் உருவாகவிருக்கின்றது. அத்துடன் **இலங்கையின் இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் இவ்வாறாக கூறியிருக்கின்றார்.**

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பது தொடர்பாக பழ.நெடுமாறனால் வெளியிடப்பட்ட செய்திகளை இலங்கை இராணுவம் முற்றிலுமாக மறுத்துள்ளது. பிரபாகரன் நலமுடன் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் பிபிசி செய்திச்சேவைக்கு தெரிவிக்கையில். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டுவிட்டதற்கான ஆதாரங்கள் தம் வசம் இருப்பதாக தெரிவித்தார். 2009ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தில் பிரபாகரன் கொல்லப்பட்டார். டி.என்.ஏ ஆதாரங்களையும் நாம் எடுத்துள்ளோம். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இறுதிக்கட்ட யுத்தத்தில் அவர் கொல்லப்பட்டுவிட்டார். குறிப்பிட்ட திகதியில் பிரபாகரனை கொல்லப்பட்டமைக்கான டி.என்.ஏ பரிசோதனை உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் எடுத்துள்ளோம். தவறான தகவல்களை அவர் வெளியிடுகின்றார். இந்தக் கூற்று எங்களுக்கு எந்தவித எச்சரிக்கை உணர்வையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் எங்களுக்கு அவர் கொல்லப்பட்டுவிட்டாரென்பது தெளிவாகத் தெரியும். அதில் சந்தேகமே இல்லை." என்று பிரிகேடியர் ரவி ஹேரத் பிபிசி தமிழிடம் தெரிவித்துள்ளார்.

**பிரபாகரன் இறந்துவிட்டார் அதில் மாற்றுக்கருத்தில்லை விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தயாமோகன் சுவிஸ் நாட்டில் இருந்து கூறிய கருத்தானது.**

விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் துறை பொறுப்பாளர் கருத்து தெரிவிக்கையில் பிரபாகரன் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி இறந்துவிட்டார் என்ற செய்தியை நாம் ஊடகங்களிற்கு அறிவித்திருந்தோம் அவரது மரணத்தை கொச்சைப்படுத்தும் வகையிலும் பிரபாகரன் தப்பிச் சென்றுவிட்டார் மீண்டும் வருவார் என்ற தொனியில் பலர் கருத்துக்களை தெரிவிக்கின்றனர். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி பிரபாகரனின் இறப்பை நாம் உறுதிப்படுத்தினோம் அப்துல்லா என்ற ஒருவர் தான் தற்பொழுது பிரபாகரன். மதிவதனி. துவாரகா ஆகியமூவரும் உயிருடன் இருப்பதாகவும் அவர்கள் வெகுவிரைவில் வெளிப்பட இருப்பதாகவும் உலகத் தமிழ் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் அவர்களுக்கு சொல்லப்பட்டு அதன் பின்னரே அவர் செய்தியாளர் மகாநாட்டில் பிரபாகரன் உயிருடன் இருக்கும் செய்தியை வெளியிட்டார்.

குறித்த நபர்கள் பிரபாகரனைப் போன்ற ஒருவரை தயார்ப்படுத்தி அதே குரலில் பேசவைத்து மிமிக்கிரி செய்யும் வேலையை செய்கின்றார்கள். பிரபாகரனை வயது சென்றவராக காட்டி வெளிநாடு ஒன்றில் இறந்துவிட்டார் என்று அவரது போராட்ட தியாகத்தை கொச்சைப்படுத்துவதற்கு மீண்டும் இவர்கள் முயற்சி செய்கின்றார். பிரபாகரன் தன் இனத்திற்காக போராடி தன்னுயிரை தியாகம் செய்துள்ளார். அந்த தியாகத்தை நாம் ஒருபோதும் கொச்சைப்படுத்தக்கூடாது. பிரபாகரன் இருக்கின்றார் என கூறிக்கொள்ளும் ஒவ்வொருவரும் அவர் மீது வைத்த அன்பின் வெளிப்பாடே அதை நாம் கொச்சைப்படுத்த விரும்பவில்லை. அவர் இறந்தாலும் பேசப்படும் ஒருவராகவே திகழ்கின்றார். நாம் போராட்ட களத்தில் நின்ற பொழுது கிழக்கிலிருந்து அவரோடு தொடர்பினை மேற்கொண்டிருந்தோம்.

08ஆம் பக்கம் பார்க்க...

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.


## உள்ளூராட்சி மன்றத் தேர்தலும், மன உளைச்சலில் வேட்பாளர்களும்

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை நடாத்துவது குறித்த வர்த்தமானி அறிவித்தல் தேர்தல் ஆணைக்குழுவினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கான பணிகளை ஆரம்பித்தது. அரசியற் கட்சிகளினால், சுயேட்சைக் குழுக்களினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, கட்டுப்பணமும் செலுத்தப்பட்டு தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டுவிட்ட சூழலில், தொடர்ந்தும் இத் தேர்தல் நடைபெறுமா? அல்லது நடைபெறாதா? என்கிற குழப்பமான நிலை தொடர்கின்றது. சுமார் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் உள்ளூராட்சி சபைகளுக்கானத் தேர்தலில் களமிறங்கியுள்ள போதிலும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையில் பாரிய விரிசல் நிலை ஏற்பட்டுள்ளதை தற்போது அவதானிக்க முடிகிறது. தற்போதைய அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை குறித்த திகதியில் நடாத்தாமல் பிற்போடுவதற்கான வேலைத்திட்டங்களைச் செய்வதாகவும், ஜனநாயகத்திற்கு முரணாகச் செயற்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புப் பதிவை ஒத்திவைக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. உள்ளூ ராட்சி சபை தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 23, 24 மற்றும் 28 ஆம் திகதிகளில் இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தபால் மூல வாக்களிப்பு தொடர்பான தினம் பின்னர் அறிவிக்கப்படும் என தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், வாக்குச் சீட்டுகளை வழங்கத் தவறிய அரச அச்சகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தேர்தல் கண்காணிப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர். வாக்குச் சீட்டுகளை வழங்காமல் இருக்க அரச அச்சகம் அரசியலமைப்புக்கு முரணான தீர்மானத்தை எடுத்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன், தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியின் கீழ் உள்ளூ ராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு பணம் வழங்குவது கடினம் என நிதி அமைச்சின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்ததாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவும் தெரிவித்துள்ளார். பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவைக் கண்டிருக்கும் இலங்கை, தற்போதிருக்கக்கூடிய பண நெருக்கடிச் சூழலில் தேர்தல் ஒன்றினை முகங்கொடுக்கத் தயாராக இல்லை என்கிற கருத்தும் அவதானிகளால் முன்வைக்கப்படுகிறது. எனினும் நாட்டின் அரசியலில் ஸ்திரத்தன்மையற்ற நிலை தொடர்வதால், தேர்தல்கள் ஆணைக்குழு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எது எவ்வாறிருப்பினும், தேர்தல் இழுபறியால் எதிர்பார்த்து களமிறங்கிய வேட்பாளர்கள் மன உளைச்சலுக்குள்ளாகியுள்ளனர். சலிப்படைந்துள்ளனர். தேர்தல் பிரசாரப் பணிகளைச் செய்ய முடியாமல், அங்கலாய்த்து வருகின்றனர்.

ஏற்கனவே மாகாண சபைகளுக்கானத் தேர்தல் நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கான அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு இயங்கும் உள்ளூ ராட்சி சபைகளுக்கானத் தேர்தல் என்பது அவசியம். ஜனநாயக நாட்டில் மக்களது உரிமைகள் மதிக்கப்படவேண்டும். தேர்தல்களை தொடர்ந்தும் ஒத்திவைப்பது, தமக்கேற்றாற்போல காரணங்களைக் கூறி பிற்போடுவது என்பதெல்லாம் ஜனநாயகத்திற்கு முரணான செயற்பாடுகளாகும்.






## கல்லறை பூக்கள்

பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் முழுமையாக உலகம் எங்கும் பாதிக்கப்பட்டன. பாடசாலைகளும் முன் பள்ளிகளும் காலவரையறை இன்றி மூடப்பட்டமையால் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஸ்தம்பிதமாகி மாணவர்களும் ஆசிரியர்களும் பல்வேறு உளச்சிக்கல்களுக்கு உள்ளாகியிருந்தனர். 'ஸ்மாட் போஃன்' மூலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறத்தொடங்கின. இவ் நவீன கற்றல் - கற்பித்தல் முறையில் வசதி படைத்த மாணவர்களே அதிக நன்மைகளைப் பெற்றனர். வசதி படைத்த சிலரால், கல்வி நவீன தொடர்பாடல் சாதனங்கள் மூலம் சையிட்டத்தைப் போல வியாபாரப் பண்டமாக மாறியது.

கமலி புதிய கல்வி கற்பித்தல் முறையாகிய செயலி (Zoom) மூலம் தரம் ஐந்து மாணவர்களுக்கு, 'மானாரின் விவேகமும் வீரமும்' - சிறுவர் கதையை இயற்றி அவளுடைய கணினி ஊடாக காட்சிப்படுத்தி மாணவர்களுக்கு நீண்ட - அழகிய - விளக்கம் மூலம் கற்பித்துக் கொடுத்தாள்.

'ஓர் அழகிய காட்டில் ஏராளமான மானார்கள் மகிழ்வாக வாழ்ந்து வந்தார்கள். அந்த மானார்களில் ராஜாவும் ராணியும் காட்டின் நடுவில் அழகிய அரண்மனையில் வாழ்ந்து வந்தனர் அவர்களின் பாச மகள் இளவரசிமானாரும் அந்தபுரத்தில் வசித்து வந்தார்.

ராஜாமானாரும் ராணிமானாரும் தங்களுக்குத் வயதாகிவிட்டது. தங்களுக்கு ஏதும் நடந்துவிட்டாலும் என்று எண்ணி இளவரசி மானாருனக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினர்கள்.

பெற்றோர், இளவரசிமானாருக்கு வரனாக வரவிருக்கும் இளவரசன் மானார் இந்தக் காட்டில் வாழ்கின்ற மானார்களில் அறிவாளியானவராகவும் அமைதியானவராகவும் ஆற்ற லுடையவராகவும் மற்றும் புத்திசாலியானவராகவும் இருக்க வேண்டும் என்று கருதினர். ஒரு நாள் ராஜாமானார் சிம்மத்சனத்தில் இப்படியான ஒரு மருகன் மாானாரை எவ்வாறு தெரிவு செய்வது என்று. கவலையுடன், இருப்தைக் கண்ட, படைத் தளபதிமானார், ராஜாமானாரின் விருப்பத்தையும் கவலையையும் கேட்டறிந்து கொண்டார்.

படைத்தளபதிமானார், புதிய இளவரசமானாரைத் தேர்ந்தெடுக்க ஒரு வழிமுறையை முன்வைத்தார். அந்த வழிமுறையும் ராஜாமானாருக்கு சரியானதாகத் தெரிந்தது. அதை நடைமுறைப்படுத்த சம்மதமும் தெரிவித்தார்.

பிள்ளைகளே, அந்த வழிமுறை என்னவாக இருக்கும்?
?..............................?................................
...?,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,.

ஒரு போட்டியை வைத்து இளவரசமானாரைத் தெரிவு செய்வதே அந்ந வழிமுறை.

அப்படி கல்வி, செல்வம், வீரம் மற்றும் புத்திசாலித்தனம் கொண்ட இளவரசமானாரைத் தெரிவு செய்வதற்கு என்ன போட்டி வைத்திருப்பார்கள் பிள்ளைகளே?

பெரிய ஆழியொன்றைப் புதிதாகக் கிண்டி, அதற்குள் நீர் ஊற்றி, முதலையார் பலரை இட்டு காட்சியளிக்கும். அந்த ஆழிக்குள் பாய்ந்து,இக்கரையிலிந்து அக்கரைக்குநீந்தி செல்வதே போட்டி. அவ்வாறு பாய்ந்து நீந்தி சென்றவர் இளவரசிமானாரைத் திருமணம் செய்வதற்கு விருப்பமில்லாதவருக்கு, அவருக்கு அரச மரியாதையுடன் ஆயிரம் பொற்காசுகள் வழங்கப்படும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கு ராணிமானாரும் ஒப்புதல் வழங்கினார்.

அடுத்த நாள் படைத்தளபாதிமானார் அந்த விடயத்தைக் கட்டியக்காரமானார் மூலம் மானார்கள் அனைவவருக்கும் அறிவித்தார். மானார்கள் எல்லோரும் காட்டின் மத்தியில் உள்ள விளையாட்டுத் திடலில் போட்டியைப் பார்வையிடுவதற்கு ஒன்று கூடினார்கள்.

ஆழியைச் சுற்றி மானார்கள் பலர் ஒன்று கூடி நின்று தங்களின் காதுகளுக்குள் இரகசியம் கதைத்தார்கள்.

மேடையில் அமர்ந்திருந்த இளவரசிமானார், பாய்ந்து நீந்தி கரைசேர்ந்து தனக்கு மாலையிடும் இளவரசமானார் யார் என்பதை ஆவலோடு பார்த்த வண்ணம் இருந்தார்?.

திடீரென்று ஒரு இளம்மானார் ஆழிக்குள் பாய்வதைப் பார்த்தார், இளவரசிமானார்.

மானார் எல்லோரும் ஆச்சரியத்துடனும் பரிதாபமாகவும் பாய்ந்த இளம் மானாரைப் பார்த்தனர்.

இளம்மானார் ஆழிக்குள் பல போராட்டங்களின் மத்தியில் நீந்தி ஆழியைக் கடந்து கரைசேர்ந்தார்.

இளவரசிமானாருக்கு முகம் காலை நேரத் தாமரை பூ போல மலர்ந்தது.

இளம்மானாருக்கு இராஜமரியாதைக் கொடுக்கப்பட்டது.

மேடைக்கு அழைக்கப்பட்ட இளவரசமானாரின் வீரமும் விவேகமும் பாராட்டப்பட்டது. ராஜாமானார், இளம்மானாரிடம், "அன்பான இளம்மானாரே, உங்களுக்கு எனது மகளைத் திருமணம் செய்வதற்கு விருப்பமா, ஆயிரம் பொற்காசுகளைப் பெற்றுகொள்ள விருப்பமா?" - பொதுவாக கேட்டார்.

இளம்மானார் கணப்பொழுது சிந்தித்து விட்டு, "எனக்கு இளவரசியைத் திருமணம் செய்தும் தர வேண்டாம் ஆயிரம் பொற்காசும் வேண்டாம். என்னை இந்த ஆழிக்குள் தள்ளி விட்ட மானாரைக் கொண்டுவருமாறு" கேட்டார்.

மானார்கள் அனைவரும் விறைப்படைந்து நின்றனர்.

இளவரசிமானாரின் முகம் சிறிது நேரம் அந்தி நேர மல்லிகைப் பூ போல மாறியது. ராஜாமானார், "இளம்மானாரே, நீங்கள் தான் நாம் எதிப்பார்த்த அனைத்தும் உடைய இளவரசமானார்" - கூறி ஆயிரம் பொற்காசையும் தனது இளவரசிமானாரையும் இளம்மானாரிடம் கையளித்தார்.

இளவாசிமானாரின் முகம் மீண்டும் காலை நேர தாமரைப் பூ போல மலர்ந்தது. இளவரசமானார்,

இளவரசிமானாருக்கு மாலையிட்டர். பின்னர் இருவரும் ராஜமரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.'

செயலி ஊடாக அனைத்து மாணவர்களும் அவர்களுக்குப் புரியுதோ புரிய வில்லையோ கமலி ஆசிரியையின் அன்பா - இனிமையான - பேச்சுக்காகவும் கதை சொல்லும் திறனுக்காகவும் வகுப்பில் உள்ள முப்பது மாணவர்களும் தொடர்புக்கு வந்து, ஆரம்பம் முதல் முடிவுவரை இருப்பார்கள். உலகத்தில் எமது நாட்டில் மட்டுமே ஆசிரியர்கள் குறைந்த வேதனத்தைப் பெற்று வாழ்வில் வேதனைப்பட்டாலும் மாணவ சமூகத்திற்காக அர்ப்பணிப்புடன் கமலியைப் போல ஓரிரு ஆசிரியர்கள் அறிவு, திறன், மனப்பாங்கு - உலா வருகின்றார்கள்.

வயதான கமலியின் தந்தைக்கு அவளின் செயற்பாடுகள் அனைத்தும் புதிதாக தெரியும் அவர் வாழ்ந்த யுகம் வேறு இப்போது இருக்கும் யுகம் வேறு என்பதையும் அவர் அறியத் தவறவில்லை. இருந்தும் ஓர் இதய சத்திரசிகிச்சை நிபுணரையும் தரமான ஆரம்ப கல்வி ஆசிரியரையும் தனது உழைப்பின் மூலம் உலகிற்கு அளித்த தன்னம்பிக்கை தளராத அரிமா அல்லவா அவர். எந்த சவால்களையும் கண்டு சோர்ந்து போகாதவர் முயற்சியிலும் பயிற்சியிலும் அசையாத - திடமான - நம்பிக்கைக் கொண்டவர். அவர் வாழ்வில் எதிர் கொண்ட சிக்கல்களை இங்கே சொல்லி முடிக்க இயலாது.

இவ்வாறன சூழலில் இலங்கையிலிருந்து இத்தாலி நாட்டிற்கு போவதற்குப் புறப்பட்டான், சாத். வெளிநாட்டிற்கான விமாப் பயணங்கள் அனைத்தும் நாளைய மறு தினத்துடன் நிறுத்தப்படவுள்ளன. என்று அரசாங்கம் சுற்று நிருபத்தை வெளியிட்டது. சாத் எப்படியாவது மாங்குளத்திலிருந்து நாளை கட்டநாயக்கா சர்வதே விமான நிலையத்திற்குச் சென்று, தான் புகுந்த நாடான இத்தாலிக்கு சென்று விட எண்ணி நித்திரைக்குச் சென்றான். கட்டிலில் திரும்பித் திரும்பிப் படுத்தான் நித்திரை அவனுக்கு வரவில்லை அந்த நாள் ஞாபகங்கள் தாமரையிலையில் நீர்போல அவனது உள்ளத்தில் நிழலாடுகின்றன.

இலங்கையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறுகளில் உள்ள நாட்டுப் போர் நடை பெற்ற சந்தர்ப்பத்தில் சாத்தின் குடும்பம் யாழ்ப்பாணத்தின் அரியாலை கிராமத்தில் எதிர் நோக்கிய சவால்கள் ஏராளம்.

யாழ்ப்பாணமே இடம் பெயர்ந்த போது காந்தம் இரும்பை இழுப்பது போல யாழ்ப்பாண மக்களை இழுத்துக்கொண்டது, வன்னி மண். கிளாலி கடல் வழி - பாதை - சனத்திரளால் நிரம்பி வழிந்தது. கடல் அன்னையும் பொறுமையாக ஆறரை இலட்ச மக்களுக்குப் பாதை அமைத்துக் கொடுத்தாள். இடப் பெயர்வில் சாத்தின் தந்தை கனகர் ஒரு கையில் தன்னுடைய ஐந்து வயது மகள் கமலியுடனும் மற்றைய கையில் மகன் சாத்துடனும் அருகில் சில பைகளுடன் மனைவி பாக்கியத்துடனும் அக்கினியிற் பட்ட மெழுகு போல மனம் உருக கிளாலியின் கடற்கரையில் திக்கு திசையற்று நின்றபோது, 'புக்காரா' விமானமொன்று சனக் கூட்டத்திற்கு மேல் மின்னி மின்னி வருகின்றது.

**தொடரும்...**

# காவி உடை அணிந்த பௌத்த பயங்கரவாதிகள்

## தங்களை தாங்களே அழித்துக்கொள்ளப்போகின்றார்கள்




உள்ளூராட்சிமன்ற தேர்தல் என்னும் விடயம் தற்பொழுது பூதாகரமாக நடைபெறுவதாக காண்பிக்கப்பட்டு தற்பொழுது இடைநிறுத்தப்பட்டிருந்தாலும் அதிகாரப்பூர்வமாக இடைநிறுத்தப்படவில்லை. நாங்கள் தேர்தல் ஆணையகத்தின் தலைவர் அவர்களை சந்தித்த பொழுது இடைநிறுத்தப்படுவதாகவோ. ஒத்திவைக்கப்படுவதாகவோ அல்லது ரத்து செய்யப்படுவதாகவோ கூட சொல்லவில்லை தபால் மூலமான வாக்கு முதல் கட்டமாக இடம்பெறும் அதற்கான வாக்கு சீட்டுக்களை விநியோகிப்பதை நாங்கள் பிற்போட்டிருக்கின்றோம் தற்பொழுது அச்சக கூட்டுத்தாபனத்துடன் எங்களுக்கு உள்ள முரண்பாடு காரணமாக நேர காலத்திற்கு திட்டமிட்டபடி செய்யமுடியாமல் இருக்கின்றது என்று தான் சொன்னார்கள் அவ்வளவும் தான். தற்பொழுது நெருக்கடியான பொருளாதார பிரச்சனையின் ஊடாக திறை சேரியில் பணம் இல்லை என்று அரசாங்கம் சொல்கின்றது அரசாங்கத்திடம் நிதி இல்லை என்பது எல்லாருக்கும் தெரியும் தெரியாத புது விடயமல்ல. அதை காரணம் காட்டி அரசாங்கம் தற்பொழுது தேர்தல் நிதி செலவழிக்க முடியாது. ஒரு ஆயிரம் கோடி அளவில் பணம் தேவை என நாம் கணிப்பிட்டிருக்கின்றோம். அந்த பணம் தேர்தல் ஆணையகத்திற்கு தரமுடியாது என அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கின்றது. தேர்தல் ஆணையகத்திற்கு செலவழிப்பது மட்டுமல்ல தேர்தல்களுக்கு செல்லக்கூடிய கட்சிகளுக்கும் செலவழிக்க வேண்டும் அல்லவா எனவே பெரும் தொகை பணம் செலவிடப்படும் ஆனால் அதன் மூலமாக மக்களின் ஆதங்கம். எதிர்பார்ப்பு. கோபம். ஆத்திரம். உணர்வுகள் எல்லாம் வெளிப்படக்கூடிய வழுக்காடாக இது அமையும் என்று தான் நாம் நினைக்கின்றோம் அது எப்படியிருந்தாலும் அப்படித்தான் பார்க்க வேண்டும். ஆனால் உள்ளூராட்சிமன்ற தேர்தல் காலத்திலே அதன் மூலமாக அதற்கான ஒரு சமிஞ்ஞை காட்டப்படும் என்று தெரியும். அதை தொடர்ந்து அரசாங்கம் பார்க்கின்றது என்று நினைக்கின்றேன் எப்படியிருந்தாலும் கூட ஒருபுறத்தில் எக்காரணம் கொண்டும் நடத்தப்படாவிட்டால் மக்கள் தெருவிற்கு வருவார்கள் அவ்வளவும் தான். அறகள கிளர்ச்சிப்போராட்டத்திலே நாங்கள் நேரடியாக பங்குபற்றவில்லை. ஆனால் எங்களது கட்சி ஆதரவாளர்கள். அங்கத்தவர்கள் 2ஆம். 3ஆம் கட்டத்தில் இருக்கின்ற செயற்பாட்டாளர்கள் அனைவரும்அந்த அறகளகிளர்ச்சிபோராட்டத்திலே சென்று கலந்துகொண்டார்கள். அதற்கு நாங்கள் அனுமதித்தோம் அதன் மூலமாக கோட்டபாய ராஜபக்ச அணியின் அமைச்சரவையின் ஜனாதிபதி பதவியில் இருந்தவர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். அது நிகழ்ந்தது அடுத்த கட்டமாகத்தான் தற்பொழுது ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தினால் சட்டப்படி தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியாக இருக்கின்றார். தற்பொழுது ராஜபக்ச அணியினர் அதிகாரப்பூர்வமாக அதிகாரத்தில் இல்லை ஆனால் திரைமறைவில் இருப்பதாகத்தான் நாங்கள் நினைக்கின்றோம்.

நல்லாட்சியில் இருக்கும் பொழுது நான் தேசிய அரசாங்கத்திலே அமைச்சுப்பதவிகளை வகித்திருந்தேன் இந்து கலாச்சார அமைச்சுப் பதவிகளைகூடவகித்திருந்தேன். இவற்றிலேதேசிய ஒருமைப்பாடு. சமூக பயன்பாடு இந்து கலாச்சார அமைச்சு எனது அமைச்சாக இறுதியிலே இருந்தது. கனிசமான காரியங்களை செய்திருக்கின்றோம் உதாரணமாக வடக்கு மாகாணத்திற்கு ஏறக்குறைய 250 முதல் 350 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதே அளவு ஒதுக்கீடு கிழக்கிலும் செய்யப்பட்டிருக்கின்றது எனது அமைச்சின் மூலம் செய்திருந்தேன். பல பாடசாலைகளில் இருந்து பல வீதிகளில் இருந்து பலதும் சீர் செய்யப்பட்டிருக்கின்றன. யாழ் மாவட்டம். கிளிநொச்சி மாவட்டம். வவுனியா மாவட்டம். மன்னார் மாவட்டம். முல்லைத்தீவு மாவட்டம் அதுபோன்று மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் பல விடயங்களை நான் செய்திருக்கின்றேன் அது அங்குள்ளவர்களுக்கு தெரியும். அது தவிர கொழும்பிலும் மலையகத்திலும் நாங்கள் பல்வேறு அபிவிருத்திகளை செய்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல எங்களது கட்சி தமிழ் போக்கு கூட்டணியானது வடகிழக்கிலே வாழக்கூடிய இந்திய வம்சாவழி பிரதானமாக மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற அடிப்படையிலே மலையக தமிழ் மக்களுக்கு தேசிய அந்தஸ்தைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றோம் நாங்கள். மலையக தமிழ் மக்களுக்குள் இருக்கின்ற மூன்றில் ஒரு பகுதியினர் தோட்டத்தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். பின்தங்கிய மக்களுக்கு அவர்களின் சொந்த நிலம் விட்டுக்கொடுப்பதற்கும் அதிலே தனி வீடு கட்டுவதற்கான அடிப்படைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கின்றோம். பல ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன இன்னும் தேவைப்படுகின்றது ஆனால் நாங்கள் ஆட்சியில் இல்லை ஆனாலும் ஆரம்பித்துவைத்துள்ளோம். அதைப் போல நுவரேலியா மாவட்டத்தில் பொதுவாக ஆறு பிரதேச சபைகளை நாங்கள் உருவாக்கி தந்திருக்கின்றோம். ஒரு பிரதேச சபையைக்கூட உருவாக்கிக்கொள்ள முடியாத நிலையிலே வடக்கு கிழக்கிலே பல கோரிக்கைகள் இருக்கும் பொழுது நாங்கள் ஒரேடியாக ஆறு பிரதேச சபைகளை நுவரேலியா மாவட்டத்திலே உருவாக்கியிருக்கின்றோம். அது மூலமாக மக்களின் அதிகார பகிர்வு என்பது அங்கே கீழ் மட்டத்திலே செய்யப்பட்டிருக்கின்றது. அதிகார சபை உருவாக்கப்பட்டிருக்கின்றது அதைப் போல பாடசாலைகளுக்கு எல்லாம் குறைந்தது 2 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் அதிகாரத்தை நாங்கள் பெற்றுக்கொடுத்திருக்கின்றோம். இவை அனைத்தையும் நாங்கள் அமைச்சரவை பத்திரத்தின் மூலமாக யாரும் மாட்டாத வகையில் செய்திருக்கின்றோம். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இன்று வடக்கு கிழக்கில் அல்லது மலையகத்தில் வாழுகின்ற தமிழ் மக்களை எடுத்துப்பார்த்தால் மலையகத்தில் சம்பள உயர்வு பிரச்சனை அல்லது தொழிற்சங்கங்கள் போராட்டங்கள். கிழக்கு முஸ்லிம்களை பொறுத்தவரையிலே தீவிரவாதிகளுடன் தொடர்புடைய பிரச்சனை வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களை பொறுத்தவரையிலே அவர்களுக்கான தீர்வு திட்டம் அல்லது வடகிழக்கு இணைக்கப்பட்ட அல்லது 13 ஐ கொடுப்பது இவ்வாறான பிரச்சனைகளை இந்த தொடர்ந்து வந்த அரசாங்கம் ஒரு இனவாத சுத்திகரிப்போடு தான் இதனை செய்து வருவதாக பார்க்கப்பட்டாலும் சிறிமாவோ பண்டார நாயக்க காலத்தில் இது ஆரம்பிக்கப்படவில்லை. 1948 இல் முதன்முதலில் பிரதமரான சேனநாயக்காவின் காலத்தில் இருந்து ஆரம்பிக்கவில்லை அவரில் காலத்தில் இருந்து தொடர்ச்சியாக இனவாத கண்ணோட்டத்தில் தான் சிங்கள ஆட்சியாளர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். சேனநாயக்க வந்தவுடனேயே மலையக தமிழ் மக்களின் குடியுரிமையும் வாக்குகளையும் பறித்தார் அது பிழை தானே இதிலே சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டு பண்டாரநாயக்காவால் கொண்டு வரப்படுவதற்கு முன்னரே 1948 லேயே முதன்முதலாக சில மாதங்களிலே மலையக தமிழ் மக்களுக்குத் தான் முதலடி விழுந்தது வாக்குகள் பறிக்கப்பட்டது. குடியிருப்புக்கள் பறிக்கப்பட்டது. அதன் பின்னர் சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டு அரச ஆதரவுடன் திட்டமிட்ட குடியேற்றங்கள் வடகிழக்கில் இடம்பெற்று பின்னர் ஆரம்பித்தார்கள். இந்த நாட்டை முழுமையாக சிங்கள பௌத்த மயமாக்க வேண்டும் என்று தான் அவர்கள் நினைக்கின்றார்கள். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கணவரான பண்டாரநாயக்காவின் ஆட்சியாக இருக்கலாம். அதற்கு முன்னர் சேனநாயக்காவின் ஆட்சியாக இருக்கலாம். டட்லி சேனநாயக்கா மற்றும் ராஜபக்ச. சந்திரிக்கா பண்டாரநாயக்க. ரணசிங்க பிரேமதாஸ. ரணில் விக்ரமசிங்க என தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அனைவருமே சிங்கள பௌத்த தேசியவாதத்தைத் தான் அடிப்படையாக கொண்டிருக்கின்றார்கள். எனவே அது பொதுவாக ஒரு கட்சிக்கு மட்டும் சார்ந்தது அல்ல. இதை மாற்றி அமைப்பதற்கு தமிழ் தரப்பு சேர்ந்து தான் இருக்கின்றன இல்லாமல் இல்லை. தமிழ் தரப்பு சேரவில்லை என்று சொல்வதற்கு முன்னர் சேர்ந்திருப்பதை பார்க்க வேண்டும் வடக்கு கிழக்கிற்கு வெளியே நாங்கள் தமிழ் போக்கு கூட்டணி என்பது மூன்று கட்சிகளினதும் கூட்டணி. ஜனநாயக மக்கள் முன்னணி. தொழிலாளர் தேசிய முன்னணி. மலையக மக்கள் மூன்று கட்சிகளும் கடந்த 7 வருடங்களாக ஒன்றாக செயற்பட்டு தமிழ் போக்கு கூட்டணியை ஆரம்பித்து அது பதிவு செய்யப்பட்ட கட்சியாகவும் உருவாக்கியிருக்கின்றார்கள் அது சாதனை. முழு இலங்கைக்கும் எடுத்துக்காட்டாக நாங்கள் இருக்கின்றோம். அதே நேரம் வடகிழக்கிலே உள்ள கட்சிகள் த.தே.கூட்டமைப்பு என்ற முறையிலே செயற்பட்டுக்கொண்டிருந்தன. ஆனால் த.தே.கூட்டமைப்பு பதிவு செய்யப்படவில்லை.

தற்பொழுது உள்ளூராட்சிசபை தேர்தலில் பார்த்தால் அந்த கூட்டமைப்பிற்குள்ளும் உடைவு தெரிகின்றது தமிழரசுக் கட்சி தனித்துப்போகின்றது அந்த கட்சிக்குள்ளும் பல்வேறு பரிவினைகள் இருப்பதை பார்க்கின்றோம். அதைப்போல உடைந்து சென்ற ஏனைய ரெலோ புளொட் போன்றோர்கள் இன்னும் சில கட்சிகளை சேர்த்துக்கொண்டு மீண்டும் ஒரு கூட்டமைப்பை உருவாக்கியிருக்கின்றார்கள். எனவே இது அரசியலிலே உடைவதும் சேர்வதும் சகஜமான விடயம் தான். ஆனால் ஏன் உடைகின்றோம் என்பதற்கும் ஏன் சேர்கின்றோம் என்பதற்கும் காரணங்கள் இருக்க வேண்டும். காரணங்கள் இருக்கின்றனவா? இல்லையா? என்பதை பொருத்தவரையிலே அவர்களிடம் தான் கேட்க வேண்டும். நான் ரணில் விக்ரமசிங்கவுடன் நெருங்கிய தொடர்பிலே பல பணிகள் ஆற்றியிருக்கின்றேன். ஆனால் அவர் ஒரு இராஜதந்திர ரீதியில் செயற்படுவதாக பலர் கூறுகின்றார்கள் இதில் சுமந்திரனின் பங்களிப்பும் இருக்கின்றது கட்சிகளை உடைக்க வேண்டும் என்ற தோரணையிலே அவர்கள் செயற்படுகின்றார்கள். ரணில் விக்ரமசிங்க ஒரு நரி என்பது புதிய விடயம் அல்ல அது தெரியும். அந்த நரி எப்படியான நரி என்பது எனக்கு தெரியாது அதாவது குள்ள நரியா அல்லது பணங்காட்டு நரியா என்பது எனக்கு தெரியாது. அவர் பல கட்சிகளை உடைப்பார் ரணில் விக்ரமசிங்க உடைக்கின்றார் என்று அவரை குறை சொல்வதை விட்டுவிட்டு ஏன் புலிகளையும் அப்படித்தானே சொல்வார்கள் புலிகளையும் உடைத்து கருணாவை பிரித்தெடுத்தவர்கள் என்று சொல்வார்கள் ரணில் விக்ரமசிங்கவின் கதாப்பாத்திரத்திற்குள் அவரது நிலையில் இருந்து பார்த்தால் அவர் அதைத்தான் செய்வார். அவர் ஒரு சிங்கள தேசியவாத தலைவர் தெளிவாக கூறினேனே அனைவரும் சிங்கள தேசியவாத தலைவர்கள் தான் அதற்குள்ளே ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட முகங்கள் இருக்கும்.



ரணில் விக்ரமசிங்கவை பொறுத்தவரையிலே சிறுபான்மை மக்களுக்கு தமிழ் மக்கள் சம்பந்தமாக கொஞ்சம் ஆதரவாளர். கரிசணை கொண்டவர் மாதிரியான தோற்றப்பாட்டை தருவாரே தவிர சிலருக்கு ராஜபக்சவை பொறுத்தவரையிலே திட்டமிட்ட வகையிலே அவர்கள் சிங்கள தேசியவாத கொடூரமானவர்கள் என்று காட்டப்பட்டாலும் கூட தோற்றப்பாடுகள் இருக்கின்ற ஆனால் அடிப்படையிலே எல்லாம் ஒன்று தான். அந்த அடிப்படையிலே ரணில் அவரின் தரப்பிலே அவரது நியாயத்தை செய்திருக்கின்றார். தமிழ் கட்சிகள் உடைந்திருக்கின்றது என்றால் புலிகள் இயக்கத்தை ரணில் உடைந்தார் என்றால் அதற்கு புலிகள் ஏன் இடம் கொடுத்தது என்று கேட்க விரும்புகின்றேன். தமிழ் கட்சிகள் ஏன் இடம்கொடுத்தது என்று கேட்க விரும்புகின்றேன். எனவே தமிழ் கட்சிகளுக்கு உள்ளே அல்லது புலிகள் இயக்கத்திற்குள்ளே உடைவதற்கான சாத்தியப்பாடு அதற்குள்ளே இருந்திருக்கின்றது. எனது வீட்டிற்குள்ளே ஒருவர் நுழைந்து என்னையும் மனைவியையும் பிரிப்பாராக இருந்தால் வெளியில் இருந்து வந்து பிரிப்பவரை குற்றம் சாட்டுவதை விட முதலில் நாங்கள் பிரிவோமானால் நானும் எனது மனைவியும் ஏன் பிரிகின்றோம் என்பதன் அடிப்படையை பார்க்க வேண்டும் நாங்கள் பிரியமாட்டோம் உறுதியாக இருப்போமேயானால் யாராலும் எங்களை பிரிக்கமுடியாது. அது தான் உண்மை அதைப்போன்று தான் பார்க்க வேண்டும்.

**தொடரும்...**

# உள்ளூராட்சி மன்ற தேர்தல்

# நடக்குமா?




**“தேர்தலை ஒத்திவைத்து மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து ஆட்சியில் இருக்க முயற்சித்தால் மக்களுடன் இணைந்து தொடர்ச்சியான போராட்டத்தை ஆரம்பிக்கத் தயார்”**

இன்றைய அரசியலில் உள்ளூராட்சி தேர்தலானது நடக்குமா? நடக்காத என்ற நிலையே காணப்படுகின்றது. ஏனென்றால் அரசின் செயற்திட்டங்கள் அனைத்தும் அவ்வாறானதாகவே காணப்படுகின்றது. உள்ளூராட்சி தேர்தல் நடத்துவதாக கூறிய ரணில் அரசாங்கம் இன்று அத் தேர்தலை இழுத்தடிப்பு செய்யும் நடவடிக்கையே முன்னெடுத்து வருகின்றனர். தேவையற்ற விடயங்களை கூறி இலங்கை அரசாங்கம் தேர்தலை பிற்போட எண்ணுவது மீண்டுமொரு மாபெரும் மக்கள் போராட்டத்தை தோற்றுவிக்கும் செயலாகவே பார்க்கப்படுகின்றது. ஜனநாயக நாட்டில் ஜனநாயகம் எங்கே போன்றதான கேள்வியை தோற்விப்பதாகவே அரசின் செயற்பாடுகள் அமையப்பெறுகின்றன.

அந்த வகையில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக பின்வருமாறான கருத்துக்கள் காணப்படுகின்றன.

**சஜித் பிரேமதாச**

2019 ஆம் ஆண்டு போன்று மீண்டும் ஏமாறக் கூடாது எனவும், அவ்வாறு செய்தால் நாடு அழிவின் விளிம்புக்குச் செல்வதை தடுக்க முடியாது போகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். கம்பளை நகரில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் உரையாற்றிய அவர்,

“பொருட்களின் விலையை அதிகரிப்பது, வரிச்சுமையை அதிகரிப்பது, உரங்களின் விலையை அதிகரிப்பது போன்றனவற்றைச் செய்யவே இந்த அரசாங்கத்திற்கு தெரியும். விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் வாழ்வை அழித்த யானை, காகம், மொட்டு அரசை நாம் விரட்டியடிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட குழுவினர் தம்மால் நன்றாக செய்ய முடியும் என்று நாடு முழுவதும் இறுமாப்பு பேசி வருகின்றனர்.

2019 ஆம் ஆண்டு நன்றாகச் செய்வதாகக் கூறி வந்தவர் முழு நாட்டையும் அழித்தார். அவர்களும் ஒன்றே இவர்களும் ஒன்றே எனக்கூறித் திரியும் அந்தச் சிவப்பு நிற சோசலிசவாதிகள்.71 மற்றும் 88 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீடுகள் எரிக்கப்பட்டு, மக்கள் கொல்லப்பட்டு, உத்தரவுகள் மூலம் நாட்டை ஆண்ட காலத்தை நாம் மறந்துவிடக் கூடாது. திருடர்களைப் பிடிப்பதாகக் கூறும் சிவப்பு சகோதரர்கள், 2005 ஆம் ஆண்டு ராஜபக்சர்களை ஆட்சிக்குக் கொண்டு வந்ததில் இருந்து அவர்கள் பிடிக்கப்போகும் திருடர்கள் ஒருவருமில்லை" - என்றார்.

**முஜிபர் ரஹ்மான்**

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் திட்டத்துக்கு எதிராக நாடு முழுவதிலும் உள்ள மக்களை எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்புக்கு வரவழைக்கவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் கீழ்த்தரமான திட்டம் தோற்கடிக்கப்படும் என்றார். அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து பொதுச் செயற்பாட்டாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்றும் அவர் கூறினார். ஜனாதிபதியும் அரசாங்கமும் தாங்கள் தோற்றுப்போவதை அறிந்து தோல்வியைத் தவிர்க்க விரும்புவதால் தேர்தலை ஒத்திவைப்பதாக அவர் கூறினார். மேலும், தேர்தலை நடத்தும் வரை பின்வாங்கப் போவதில்லை எனவும், தேர்தலை நடத்தாவிட்டால் நல்லதோ கெட்டதோ பிரச்சினையைத் தீர்க்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

**வசந்த முதலிகே**

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் பதவி விலகுவதற்கான காலம் தற்போது ஆரம்பமாகியுள்ளதாக பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. தேர்தலை ஒத்திவைத்து மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து ஆட்சியில் இருக்க முயற்சித்தால் மக்களுடன் இணைந்து தொடர்ச்சியான போராட்டத்தை ஆரம்பிக்கத் தயார் என அதன் அழைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்தார். பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் நாடளாவிய ரீதியில் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், உடனடியாக பதவி விலகுவதே அரசாங்கத்திற்கு எஞ்சியுள்ள ஒரே வழி எனவும் அவர் தெரிவித்துள்ளார். பொருத்தமற்ற வாயிற்காப்பாளர் 69 இலட்சம் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ச உதைக்கப்பட்ட பின்னர், அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட வாயிற்காப்பாளர் பொருத்தமற்றவர் என அவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

**பந்துல குணவர்த்தன**

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் இல்லையென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். நிதி இல்லை என்பதால் வாக்காளர் அட்டை மற்றும் தேர்தல் செயற்பாடுகளுக்குரிய அச்சுப் பதிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பாகத் தனியார் இலத்திரனியல் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு புதன்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை. தேர்தலை உரிய காலத்துக்குள் நடத்த முடியுமென உயர்நீதிமன்றம கூறியுள்ள நிலையில் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்று அமைச்சர் கூறினார். தேர்தல் ஒத்திவைக்கப்படுமென எதிர்க்கட்சிகள் பொய் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன. சில ஊடகங்களும் அதற்கு முக்கியத்தும் கொடுத்து மக்களைக் குழப்புகின்றன.

ஆனால் தேர்தல் ஒத்திவைக்கப்படுமென இதுவரையும் அரசாங்கம் அறிவிக்கவில்லை என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார். அதேவெளை நிதிப் பற்றாக்குறை உள்ளமையினால் தேர்தலுக்கான செலவுகள் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும், போதிய நிதி இல்லாமையினால் தேர்தல் தொடர்பான பணிகளில் தாமங்கள் ஏற்படுவதாகவும் இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் கூறுகின்றன.

**மஹிந்த தேசப்பிரிய**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு மதிப்பிடப்பட்டுள்ள செலவில் தேர்தலுக்கு முன்னர் 3 பில்லியன் வழங்கப்பட்டால் ஆணைக்குழுவினால் தேர்தலை நடத்த முடியும். அவ்வாறில்லை என்றால் மாத்திரமே சட்டத்திட்டங்களுக்கமைய குறுகிய காலத்திற்கு தேர்தலைக் ஒத்திவைக்க வேண்டிய நிலைமை ஆணைக்குழுவிற்கு ஏற்படும் என்று முன்னாள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். எவ்வாறிருப்பினும் நிதி நெருக்கடியைக் குறிப்பிட்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டால், இதே காரணத்தை அடிப்படையாகக் கொண்டு ஏனைய தேர்தல்களையும் காலம் தாழ்த்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாணத்தில் வியாழக்கிழமை (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் , தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தவறானவை என்று எவராவது குறிப்பிடும் பட்சத்தில் அதனுடன் ஒருபோதும் என்னால் இணங்க முடியாது. தற்போதைய தேர்தல் ஆணைக்குழு தனது வரையறைக்குள் சரியாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதே எனது நிலைப்பாடாகும். ஏதேனுமொரு தேர்தல் நிதி நெருக்கடியால் காலம் தாழ்த்தப்படுமாயின் . இனிவரும் காலங்களில் எந்தவொரு தேர்தலும் காலம் தாழ்த்தப்படக்கூடும். எனவே, நிதி இல்லை எனக் கூறி தேர்தலைக் காலம் தாழ்த்த அனுமதிக்கக் கூடாது. செலவுகளைக் கட்டுப்படுத்தி தேர்தலை நடத்த முடியும்.

தற்போது 10 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் செலவுகளைக் கட்டுப்படுத்தினால் 8 பில்லியனில் தேர்தலை நடத்தலாம். அதனை ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் செலுத்த வேண்டிய அவசியம் கிடையாது. தேர்தலுக்கு முன்னர் இரண்டரை அல்லது 3 பில்லியன் ரூபா போதுமானது. அதனையும் கட்டம் கட்டமாக வழங்க முடியும். தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்கு சீட்டுக்கள் 19ஆம் திகதியாவது விநியோகிக்கப்பட்டால் 28ஆம் திகதியளவில் தபால் மூல வாக்கெடுப்பு நடத்த முடியும். எனவே மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதிலும் சிக்கல் ஏற்படாது. இதனை மீறி இடையூறுகள் ஏற்படும் பட்சத்தில் தேர்தல் ஆணைக்குழுவினால் குறுகிய காலத்திற்கு தேர்தலை ஒத்தி வைக்க முடியும். எனினும் அது அரசியலமைப்பின் பிரகாரம் குற்றம் என்பதால் தேர்தல் காலம் தாழ்த்தப்பட மாட்டாது என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதி வழங்கல் தொடர்பான சாத்தியமான சிக்கல் நிலைமைகளை, அது பெரும் நெருக்கடியாக மாறுவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுமாறு இலங்கை தேர்தல் கண்காணிப்புக்கான தேசிய மையம் (NCEMS) தேசிய தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

எது எவ்வாறாயினும் நாட்டில் தேர்தல் நடத்துவது அவசியமாகும். எனவே தேர்தல் நடத்துவதாக சொல்லப்பட்டு போதியளவான நிதி இல்லை என்று இழுத்தடிப்பு செய்யும் ராஜதந்திர அரசியலை ரணில் அரசாங்கம் செய்யாமல், தேர்தலை குறைந்த செலவீனங்களுடன் செய்து முடிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் இல்லையென்றால் மக்கள் போராட்டம் வெடிப்பதற்கான வழியினை இவர்களே உருவாக்கி கொடுப்பதாக அமையப்பெறும் என்பதே இன்றைய நிலைப்பாடாக காணப்படுகின்றது.

**“மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதிலும் சிக்கல் ஏற்படாது. இதனை மீறி இடையூறுகள் ஏற்படும் பட்சத்தில் தேர்தல் ஆணைக்குழுவினால் குறுகிய காலத்திற்கு தேர்தலை ஒத்தி வைக்க முடியும். எனினும் அது அரசியலமைப்பின் பிரகாரம் குற்றம் என்பதால் தேர்தல் காலம் தாழ்த்தப்பட மாட்டாது என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்”**

**மாதுரி**

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்காது




**-துரியோதரன்-**

சமகால அரசியலில் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தன்னுடைய மிக நீண்ட அரசியல் காலப்பகுதியில் தமிழ் மக்களை ஏமாற்றிய வரலாறு தான் காணப்படுகின்றது. தமிழ் மக்களை மட்டுமல்ல இலங்கையிலுள்ள சிங்கள மக்களையும் ஏமாற்று அரசியலை மேற்கொண்டு ஏமாற்றி வருவது தான் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது. அவரை நம்பி நம்பி நாங்கள் தான் ஏமாறுகின்றோமே தவிர அவர் தனது நிலைப்பாட்டில் மிக தெளிவாகத்தான் இருக்கின்றார். அதைப்போன்று தற்பொழுது கூட எந்தவித அரசியல் செல்வாக்கும் இல்லாத ஒரு மனிதன் மீண்டும் ஜனாதிபதியாக வரக்கூடியதாக இருக்கின்றது என்றால் அது மிகப்பெரிய தந்திரத்தினுடைய சாதனை என்று தான் சொல்ல வேண்டும். அப்படியான ஒரு மனிதன் எங்களுக்காகவோ மக்களுக்காகவோ செயற்படுவார் என்று எதிர்பார்ப்பது எங்களது முட்டாள்தனம்.

எனவே தேர்தலை பொறுத்த வரையில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஒவ்வொரு வரும் தங்களது நிலைநாட்டிக்கொள்வதற்காக இன்று இருக்கும் மிளிர்ச்சியடைந்த அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொண்டு வருவதற்கான முயற்சிகள் தான் நடக்கின்றதே தவிர ஒருவரும் இந்த நாட்டில் ஒரு ஜனநாயகம் வளர வேண்டும் என்றோ அல்லது தேர்தல் சீரான முறையில் நடக்க வேண்டும் என்ற எண்ணத்திலோ யாரும் செயற்பட்டுக்கொண்டிருப்பதாக தெரியவில்லை. எனவே விற்கின்றதனால் யாருக்கு இலாபம் இருக்கின்றதோ? அவர்கள் விற்கச்சொல்லி நிற்பார்கள். விற்காமல் இருப்பதனால் யாருக்கு இலாபம் இருக்கின்றதோ அவர்கள் விற்க வேண்டாம் என்று சொல்லுவார்கள் இது தான் இன்று நடந்துகொண்டிருக்கின்றதே தவிர இன்று மக்களுக்காக சிந்தித்து எதுவுமே நடக்கவில்லை. எனவே இந்த வகையில் ரணில் இப்படி செய்கின்றார் அப்படி செய்கின்றார் என்று கூறி மீண்டும் மீண்டும் நாங்கள் ஏமாந்துகொண்டிருக்கின்றோமே தவிர அவர் தன்னுடைய நரித்தந்திரத்தை தொடர்ச்சியாக மிகத் தெளிவாக மிக நீண்ட கால அரசியலில் எந்தவித மாற்றமும் இல்லாமல் செய்து கொண்டிருக்கின்றார்.

தமிழ் தரப்புக்கள் எல்லாம் இணைந்து வந்தால் எங்களுக்கு 13 என்பது தேவைப்படாது அதற்குரிய விடயத்தை நான் பெற்றுத்தருகின்றேன் என்பதைக் கூறியுள்ளார். அதுவும் ஒரு தந்திரம் தான் ஏனென்றால் 13 ஆம் திருத்த சட்டம் என்பது யாப்பில் இருக்கும் விடயம். அதை கேள்விக்குள் உட்படுத்துவதே அரசியல் யாப்பு ரீதியாக குற்றம். அது ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கும் ஒரு விடயத்தை பின்னர் அவர்கள் சம்மதித்தால் நாங்கள் அதை நிறைவேற்றுவோம் என்று சொல்வது தந்திரமோ இல்லையோ. 13 ஆம் திருத்த சட்டம் என்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் கொண்டு வரப்பட்ட சட்டம் அது இன்று அரசியல் யாப்பில் இருக்கின்றது. அது எல்லாவற்றையும் ஒரு பக்கத்தால் பிச்சு பிச்சு எல்லாவற்றையும் பலவீனப்படுத்தி விட்டு ஒரு அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அரசியல் வரைபிலே கொண்டு வரப்பட்ட ஒரு விடயத்தை நீங்கள் பலவீனப்படுத்தியது அதுவே ஒரு குற்றம் அப்படியிருக்கும் ஒரு விடயத்தை அவர்கள் சம்மதித்தால் நாங்கள் திரும்ப 13 ஐ கொண்டுவருவோம் என்பதெல்லாம் ஏமாற்றும் விடயமாக உங்களுக்கு தெரியவில்லையா? எந்த காலத்திலும் தமிழ் தேசியத்தில் இருக்கின்ற எந்தவொரு தமிழ் தரப்பும் ஒரு காலமும் 13 ஆம் திருத்த சட்டம் தீர்வு என்று சொல்லவில்லை. ஆனால் அது இலங்கை அரசியல் யாப்பில் இடம்பெற்றிருக்கின்ற ஒரு விடயம். அந்த விடயத்தைப்பற்றி பேசுவதற்கோ ஒன்றும் இல்லை. தமிழ் மக்களுக்கு தீர்வு கொண்டு வர வேண்டும் என்றால் நீங்கள் சமஷ்டியைப் பற்றி பேசுங்கள் அல்லது சுயாட்சியைப் பற்றி பேசுங்கள் சுயநிர்ணய உரிமையைப் பற்றி பேசுங்கள் அது வேறு. 13, 13 என்று சொல்லிக்கொண்டிருப்பது ஒரு முட்டாள்தனமான விடயமாக தெரியவில்லையா? இதே கருத்தைத்தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூறினார். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி யாப்பில் இருப்பது ஒற்றையாட்சி. ஆனால் அவர் பேசுவது சமஷ்டியைப் பற்றி அல்லது சுயநிர்ணய உரிமை என்று பேசிக்கொண்டிருக்கின்றாரே தவிர தங்களது கட்சியின்அரசியல்யாப்பைகூடஇன்னும்திருத்த முடியாமல் இருக்கின்றார்கள். அவர்களின் கட்சி அரசியல் யாப்பை எடுத்துப்பார்த்தால் அவர்கள் இன்றும் ஒற்றையாட்சி முறையின் கீழ் தான் அவர்களின் கட்சி இயங்குவதாக இருக்கின்றது. சும்மா மக்களுக்காக ஒரு கதையும் பின்னர் புலம்பெயர்ந்து வாழும் புலிகளை வைத்துக்கொண்டு ஒரு அரசியல் நடத்திக்கொண்டிருப்பதையெல்லாம் காண கூடியதாக இருக்கின்றது.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெறுமா இல்லையா? என்ற கேள்விக்கு மிக விசேடமாக சொல்லப்படும் விடயம் பணம் இல்லை என்பது தான். தேர்தல் நடப்பதனால் இந்த நாட்டின் பொருளாதார சூழ்நிலைகள். இந்த நாட்டில் இடம்பெறுகின்ற பொருளாதார முறைகளை எடுத்துப்பார்த்தால் அநேகமாக தேர்தல் ஒன்று அதுவும் உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடக்கும் என்றால் பல கறுப்பு பணம் வெளியில் வரும் அது பொருளாதாரத்தை ஒருநாளும் பாதிக்காது. ஏதோவொரு வகையில் இவர்கள் தேர்தலை நடத்தினார்கள் என்றால் அதனால் பொருளாதார நிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தாது. தற்பொழுது மோசமான ஒரு நிலை தான் உள்ளது இதிலிருந்து பாரதூரமான நிலையை கொண்டு வரும் என்ற கருத்து பிழையான கருத்து. ஆனால் இனி வருபவர்கள் தங்களது அரசியல் இலாபம் நட்டம் என்பவற்றைப் பற்றி சிந்தித்து நடத்துவதும் நடத்தாததும் என்பது அவர்களின் நிலை தான்.

தேர்தல் நடத்தினால் நாட்டின் பொருளாதாரம் இன்னும் மோசமான நிலைக்கு போகும் என்பதெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. முதலாவதாக எந்த தேர்தலை நடத்த வேண்டும் என்றில்லை. இன்று 50 வீதத்திற்கும் மேலான வேலைத்திட்டங்கள் முடிந்த நிலையிலுள்ள ஒரு தேர்தலை நடத்துவதில் கஞ்சத்தனம் காட்டுவது பிழையான விடயம். எது எதற்கோ உலக நாடுகள்எல்லாவற்றிடமும்பிச்சையெடுப்பார்கள் இதற்கும் பிச்சை எடுத்துக்கொள்ளுங்கள் அது ஒரு நாளும் பாதிக்காது. நீங்கள் தானே கூறுகின்றீர்கள் இந்த ஜனாதிபதியை நாங்கள் கொண்டு வந்தால் அவர் பொருளாதார நிலையை சர்வதேச சமூகங்களுடன் நல்லுறவை ஏற்படுத்தி அதன் மூலம் கடனைப் பெற்றோ அல்லது ஏதோவொரு வகையில் இந்த நாட்டு மக்களுக்கான பொருளாதாரத்தை சரி செய்வார் என்ற நோக்குடன் தானே செய்துகொண்டிருக்கின்றார். ஜனாதிபதியாக வந்தவருக்கு இந்த தேர்தல் நடத்துவதற்கான நூறு மில்லியனையோ அல்லது 200 மில்லியனையோ எடுத்து தேர்தலை நடத்துவது பெரிய விடயமோ. அது ஒருநாளும் பொருளாதாரத்தை பாதிக்காது ஏனென்றால் கறுப்பு பணம் வெளியில் வருவது தேர்தல் காலங்களில் தான். எனவே அது நாட்டின் பொருளாதாரத்தை ஒருபோதும் பாதிக்காது.



# தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதைக்கவந்த சகுனி எம்.ஏ.சுமந்திரன்

## பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் ஜனா எம்.பியுடனான (ரெலோ) சிறப்பு நேர்காணல்

கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : வடக்கரசியல் என்பது வேறு கிழக்கரசியல் என்பது வேறு. இங்கு முஸ்லிம்கள் பெரும்பாலானோர் வாழ்கின்றார்கள் மாநகரத்தை கைப்பற்றுவதற்காக முஸ்லிம்கள் முனைப்போடு செயற்படுவார்கள். இதில் கடந்த காலத்தில் பிள்ளையான் அவர்கள் ஹிஸ்புல்லாவுடன் இணைந்து செயற்பட்டார் அல்லது அரச தரப்புடன் இணைந்து செயற்பட்டதன் காரணமாக அவர் தன்னுடைய ஆட்சியை தக்கவைத்துக்கொண்டார் அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த பகுதியிலே கேட்கவில்லை என்பதற்காக அவர் முதலமைச்சராக செயற்பட்டார் என்றெல்லாம் பல விடயங்கள் இருந்தது. தற்பொழுது கிழக்கை பொறுத்தவரையிலே ஒரு முஸ்லிம் தலைமை இங்கு வருவதற்கான சாத்தியம் இருக்கின்றது. ஏனென்றால் அதனால் தான் ரவூக் ஹக்கீம் தற்பொழுது ஹிஸ்புல்லாவுடன் இணைந்திருக்கின்றார். இணைந்து கை கொடுத்ததன் காரணமாக கிழக்கு மாகாணத்தை அவர்கள் உள்ளூராட்சிமன்றங்களை கைப்பற்றுவதற்கான முனைப்புடன் செயற்படுகின்ற பொழுது இங்கிருக்கின்ற பிள்ளையான் அல்லது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி அல்லது உங்களது DTNA என்ற கட்சிகள் எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்க முடியும் என்பது உங்களது கருத்து?**

பதில் : அது மக்களது கைகளில் தங்கியிருக்கின்றது ஏனென்றால் உண்மையில் கடந்த போராட்ட காலங்களிலே வடக்கு கிழக்கில் எல்லாம் பாதிப்புக்கள் ஏற்பட்டது. உயிரிழப்புக்கள் ஏற்பட்டது. குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலிலே கொத்துகொத்தாக இலட்சகணக்கிலே மக்கள் இறந்தார்கள் ஆனால் 1982, 1983 காலகட்டங்களிலே இந்த போராட்டம் வீரியம் அடைந்த காலத்திலிருந்து கிழக்கிலே மக்கள் வித்தியாசமான முறையிலே பாதிக்கப்பட்டார்கள். வடக்கிலே மோதல்கள் மூலமாக இலங்கை அரச படைகளுக்கும் போராட்ட இயக்கங்களுக்கும் இடையிலான மோதல்கள் அல்லது கொத்துக்குண்டு பொஸ்பரஸ் குண்டு இப்படியெல்லாம் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இங்கு அதற்கு மேலாக ஏனைய இனங்களாலும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் கிழக்கிலே. இன்று அம்பாறை மாவட்டத்திலே பல தமிழ் கிராமங்கள் இல்லை. பெயர் இருக்கின்றது மக்கள் இல்லை. அது போன்று மட்டக்களப்பிலே 1990 காலகட்டங்களில் முஸ்லிம் ஊர்காவற்படையினர் இலங்கை இராணுவத்துடன் இணைந்து கிராமம் கிராமமாக அழித்தார்கள். இவ்வாறான வரலாறுகள் எல்லாம் இருக்கின்றது. எதிர்காலத்திலே நீங்கள் கூறியது போன்று நாங்கள் ஒற்றுமை இல்லாமல் இருந்தால் கிழக்கு மாகாணம் அவர்களது ஆட்சி அதிகாரங்களுக்குள்ளே சென்றுவிடும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. இருந்தாலும் தமிழ் மக்கள் தற்போதைய சனத்தொகையின் அடிப்படையில் கூட தனித்து ஆட்சியை பிடிக்கக்கூடிய ஒரு நிலையில் இல்லை. தமிழ் மக்களாக இருந்தாலும் சரி தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம் மக்களாக இருந்தாலும் சரி தனித்து ஆட்சியை பிடிக்கக்கூடிய சூழல் இங்கு இல்லை. கிழக்கு மாகாணத்திலே 2011 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு கணக்கீட்டின் அடிப்படையில் தமிழ் மக்கள் 39.7 வீதம். முஸ்லிம் மக்கள் 37.2 வீதம். சிங்கள மக்கள் கிட்டத்தட்ட 24 வீதம் என்ற அடிப்படையில் தான் வாழ்ந்தார்கள். ஆனால் 12 வருடங்களிற்கு பின்பு இன்று முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களின் சனத்தொகையைவிட கூடிய நிலைக்கு வந்திருக்கலாம். ஆனால் நாங்கள் ஒற்றுமையாக இருந்தால் கூடுதலான ஆசனங்களை பெற்றால் இன்னொரு கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கும் பொழுது நாங்கள் அதில் முதலமைச்சராக அல்லது ஆட்சியதிகாரத்தை எங்களுடன் கைக்குள் வைத்திருக்கும் நிலையில் இருக்கலாம்.

**கேள்வி : கருத்து கணிப்பின்படி பார்க்கும்பொழுது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தினுடைய கொலை வழக்குடன் தொடர்புடையவர் என்று அவருக்கான விசாரணைகள் நடந்துகொண்டிருந்த பொழுதும் அவர் சிறையில் இருந்தபொழுதும் தனது வெற்றியை ஈட்டி வெளியில் வந்தவர். அந்த அடிப்படையில் னுவுயே ஆட்சியை அமைப்பதற்கு ஏதுவான வாக்குகள் வராவிட்டால் நீங்கள் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியுடன் இணைவதை தவிர்த்து உங்களுக்கு வேறு வழி இருக்கின்றதா?**

பதில் : அதை நாங்கள் அந்த நேரம் யோசித்துப் பார்ப்போம். துமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் தமிழீழ விடுதலைப்புலிகளிலே இருந்து பிரிந்துவந்தவர்கள் அவர்கள் உண்மையிலே தமிழ் மக்களது இருப்பை நேசிப்பவர்களாக இருந்தால் அவர்களது பாதையிலே மாற்றம் வரவேண்டும். அவர்களது பாதை தற்போதைய போக்கிலே சென்றுகொண்டு இருக்குமாக இருந்தால் அதாவது ராஜபக்ச சகோதரர்களுடன் தாம் கூட்டு சேர்ந்து அரசியல் நடத்திக்கொண்டு போனால் அதற்கு வாய்ப்பில்லை. அவர்களது பாதையிலே எதிர்காலத்தில் மாற்றங்கள் இருந்தால் நாங்கள் அதைப்பற்றி சிந்திக்கலாம். ஏனென்றால் அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை நிரந்தர எதிரியும் இல்லை. தற்பொழுதுகூட தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் கடந்த காலத்திலிருந்து தமிழரசுக் கட்சியில் இருக்கும் முக்கியமானவர்கள் கூட ராஜபக்சவின் கூட்டுக்குள் இருந்து ஏன் பிள்ளையானுடன் இணைந்து 2015 பாராளுமன்ற தேர்தலிலே ஒரே தேர்தலில் போட்டியிட்டவர் தான் சாணக்கியன். ஹிஸ்புல்லா, பிள்ளையான், சாணக்கியன் அனைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற தேர்தலிலே கேட்டவர்கள். நான் அவரை குற்றம் சாட்டுகின்றேன் என்றில்லை அவர் மனம் மாறி திருந்தி அவர் தமிழ் தேசியத்திற்குள் 2018 ஆம் ஆண்டு வருகின்றார். அதே போன்று சிலபேர் மனம் மாறி திருந்தி நாங்கள் உங்களுடன் இணைந்து உங்களது பாதையிலே பயணிக்கப்போகின்றோம் என்றால் அதை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை முடிவெடுக்கும் என்று கூறவில்லை. அவர்களை இணைக்க வேண்டும் என்றும் நான் கூறவில்லை ஆனால் சிந்திப்பார்கள். சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

**கேள்வி : கடந்த காலங்களிலே ஒருசில ஊடகங்களிலே கருணா கூறியிருந்தார் அல்லது பிள்ளையான் கூறியிருந்தார் படுகொலையுடன் தொடர்புடையவர் என்று ஒரு பெண்ணின் படத்தைப் போட்டு முகநூலில் வெளிவந்தது. அதே போன்று சாணக்கியன் கூறிய விடயம் என்னவென்றால் அண்ணன் ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்ட விடயத்திலே பிள்ளையான் அவர்களுக்கு தொடர்பு இருக்கின்றது என்று தெரியும். அப்படியிருந்தும் அவர் அவுஸ்திரேலியாவில் இருந்துவிட்டு கடந்த காலத்தில் ஜேஏ உடன் இணைந்து செயற்பட்டவராகத்தான் த தே கூ இருந்து சாணக்கியன் செயற்பட்டிருக்கின்றார். இவ்வாறான குற்றச்சாட்டு வருகின்ற பொழுது நீங்கள் சொல்வது போன்று திருந்தி வருவது என்றால் எந்த வகையில் திருந்திவருவது?**

பதில் : குற்றச்சாட்டு அல்லது விமர்சனம் என்பது எழுந்தமாறியாகவும் வைக்கப்படலாம். விமர்சனங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அவைகள் உறுதிப்படுத்தப்பட்ட சில விடயங்களாக இருக்காது. நான் கூறவருவது என்னவென்றால் அரசியலிலே பிழையான வழிகளிலே செல்பவர்கள் தங்களது தவறுகளை உணர்ந்து திருந்தி இந்த பாதையிலே தமிழ் மக்களுக்காக நான் செல்வேன் என்பதை நாங்கள் சிந்திக்கத்தான் வேண்டும்.

**கேள்வி : கருணாவும் விடுதலைப்புலிகளில் இருந்து வந்தவர் தான். 22 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை பிளவுபட்டுப்போவதற்கும் இந்த போராட்டம் மௌனிக்கப்படுவதற்கும் ஏதுவான மிகமுக்கியமான சூத்திரதாரியாக இருந்தவர் என்று குறிப்பிடப்படும் இவர் வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா?**

பதில் : நிச்சயமாக அது இயலாத காரியம். கருணா அவர்களை ஏற்றுக்கொள்ளமுடியாது. பிள்ளையான் அவர்களையோ, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளையோ நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. திரும்ப திரும்ப நான் சொல்லுகின்றேன் தமிழ் தேசியத்திற்குள்ளே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று எக்காரணம் கொண்டும் நான் சொல்லவில்லை என்னுடைய கணிப்பிலே. கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையிலே கிழக்கின் இருப்பை தக்கவைக்க சில விடயங்களில் கூட்டிணைய வேண்டும் என்றும் இல்லை. சில விடயங்களில் ஒத்துப்போக வேண்டிய நிலைமை வந்தால் நாங்கள் மக்களுக்காக ஒத்துப்போகத்தான் வேண்டும். ஏனென்றால் எங்களது போராட்டம் எங்களுக்காக அல்ல எங்களது மண்ணுக்காகவும் எங்களது மக்களுக்காகவும் தான். நாங்கள் வெறுமனே மண்ணை வைத்துக்கொண்டு எதுவும் செய்யமுடியாது. நாங்கள் எங்களது மக்களை காப்பாற்றுவதற்காகத்தான். எங்களது மக்களை சுதந்திரமாக வாழ வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் போராட்டத்திற்கு சென்றவர்கள். அதை நாங்கள் இன்றும் மனதில் வைத்திருக்கின்றோம். கிழக்கு மாகாணம் கொஞ்சம் கொஞ்சமாக பறிபோய்க்கொண்டிருக்கின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் இன்று பறிபோய்க்கொண்டிருக்கின்றது. ஏனென்றால் கிழக்கு மாகாணத்திலே அம்பாறை மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் சிங்கள பிரதிநிதித்துவம் இன்று மாகாணசபைக்கும் பாராளுமன்றிற்கும் இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தான் அந்த பிரதிநிதித்துவம் இல்லை. அந்த பிரதிநிதித்துவத்தை கொண்டுவருவதற்கு அவர்கள் மும்முரமாக முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள். இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 4000 சிங்கள வாக்குகள் இருக்கின்றது. அவர்கள் அதை 15 ஆயிரம் வாக்குகளாக மாற்றுவதற்கான முயற்சியை தற்போதைய கவர்னர் உட்பட செய்துகொண்டிருக்கின்றார்கள். மர முந்திரிகை செய்கை, மேட்டு நில பயிர்ச்செய்கை, சோளன் செய்கை என சிங்கள மக்களை கொண்டு குடியேற்றிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் மாற வேண்டும் என்றால் நாங்கள் இப்படியே பிரிந்திருந்து தேர்தலை கேட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்வரும் மாநகர சபையிலே 8, 10 ஆசனங்களையும் தமிழரசுக் கட்சி 4 ஆசனத்தையும் ஏனைய கட்சிகள் 1, 2 ஆசனத்தையும் வைத்திருப்பதால் எந்த பயனும் இல்லை.

**நேர்காணல் : இரணியன்**

# ஐ.எம்.எவ் கடன் திட்டத்தை மார்ச்சில் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பு




சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தை மார்ச் மாதத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், தற்போது குறைந்து வரும் பணவீக்கத்துக்கு ஏற்ப வங்கி வட்டி வீதத்தைக் குறைப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்றும் அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். சிறிய மற்றும் பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக அன்று (16) பிற்பகல் அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அதிபர் இதனைக் குறிப்பிட்டார்.

**அரிசியின் உற்பத்தி செலவு**

எரிபொருள் விலை, மின் கட்டணம், இயந்திரப் பராமரிப்பு செலவு, போக்குவரத்து செலவு உள்ளிட்ட அனைத்து உற்பத்தி மற்றும் நிர்வாக செலவுகள் உயர்ந்துள்ளதால், அரிசியின் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது. தற்போதைய நெல் உற்பத்தி விலையுடன் ஒப்பிடும்போது, சந்தையில் தற்போதுள்ள அரிசி விலைக்கு தமது உற்பத்திகளை விற்பனை செய்தால் நட்டம் ஏற்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் இங்கு சுட்டிக்காட்டனர்.

அதேபோன்று, நெல் கொள்வனவு செய்ய பெற்றுக்கொண்ட வங்கிக் கடனுக்கு 28 வீத வட்டி செலுத்த வேண்டியிருப்பதனால் ஏற்படும் சிரமங்களையும் அவர்கள் முன்வைத்தனர். பயிர்ச் செய்கையின் போது விவசாய இடுபொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால், நெல் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதாகவும், விவசாயிகள் பயிர்ச்செய்கைக்காக வங்கிகளில் பெற்ற கடனுக்கு அதிக வட்டி செலுத்த வேண்டியுள்ளதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு, விவசாயிகளின் உற்பத்திச் செலவும், அரிசி ஆலை உரிமையாளர்களின் அரிசி உற்பத்திச் செலவும் அதிகரித்துள்ளதால், அரிசி ஆலை தொழிலை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் இதற்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு நிவாரணம்**

இது தொடர்பில் அவதானம் செலுத்திய அதிபர், நுகர்வோர் மற்றும் விவசாயிகளுக்கு சகல விதமான நிவாரணங்களையும் வழங்குவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனக் குறிப்பிட்டார். விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைத்து உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வைக் காண்பதற்கும் அதிபர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

# பிராந்திய செய்திகள்

## சமாந்தரமாக பயணித்த இரண்டு பேருந்து ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து



தம்புள்ளை வைத்தியசாலைக்கு முன்பாக தனியார் பஸ்ஸொன்றும் லங்கம பஸ்ஸொன்றும் ஒன்றுடன் ஒன்று சமாந்தரமாக பயணித்த இரண்டு பஸ்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் சுமார் ஒரு மணித்தியாலம் பஸ்சுக்குள் 50க்கும் மேற்பட்டோர் சிக்கிக் கொண்டனர். அநுராதபுரத்தில் இருந்து கண்டி நோக்கிச் செல்லும் லங்கம பேருந்தும், பொலன்னறுவை அருணபுரவிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பேருந்துமே விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த இரண்டு பேருந்துகளும் தம்புள்ளை நகரிலிருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டதாகக் கூறப்படுகிறது. தம்புள்ளை வைத்தியசாலைக்கு முன்பாக தனியார் பஸ் லங்கம பஸ்ஸை கடந்து செல்லத் தயாரான போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின் போது இரு பேருந்துகளிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் இருந்ததாகவும், தனியார் பேருந்துடன் லங்கம பேருந்து நெருங்கிக் கொண்டதில் 50-க்கும் மேற்பட்டோர் பேருந்தில் சிக்கியதால் தனியார் பேருந்தில் இருந்து இறங்க முடியாமல் தவித்ததாகவும் தெரிய வருகிறது. பின் தம்புள்ளை போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஸ்தலத்துக்கு வந்து சோதனை செய்து லங்கம பேருந்தை அகற்றி தனியார் பேருந்தில் இருந்து பயணிகளை விரைவாக வெளியேற்ற நடவடிக்கை எடுத்தனர்.

## மின்சாரம், எரிபொருள், சுகாதார சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

முத்துறைகளின் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார். 1979 ஆம் ஆண்டின் இல. 61 இன் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2ஆவது பிரிவின்படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி 17ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் குறித்த வர்த்தமானியின் படி, மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் விநியோகம் என்பன அத்தியாவசிய சேவைகளாக்கப்பட்டுள்ளன. மேலும் வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் நோயாளிகளின் பராமரிப்பு இல்லங்கள் மற்றும் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## க.பொ.த சாதாரண தர பரீட்சார்த்திகளுக்கான அறிவிப்பு




கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் செயற்பாடு 2023 பெப்ரவரி 1 முதல் 28 பெப்ரவரி 2023 வரை இணைய முறையில் மட்டுமே நடத்தப்படுகிறது. பெப்ரவரி 28, 2023 அன்று நள்ளிரவு 12 மணிக்குப் பிறகு இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது.

அன்றைய தினம் நள்ளிரவுக்குப் பின் ஒன்லைன் நுழைவு நிறுத்தப்படும் என்றும், எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்கள் பெறும் திகதியில் மாற்றம் செய்யப்பட மாட்டாது என்றும் வலியுறுத்தப்பட்டது. எனவே விண்ணப்பங்களை கடைசித் திகதிக்கு முன் அனுப்புவது கட்டாயமாகும்.

02ஆம் பக்க தொடர்ச்சி...

இறுதியில் எமது தொடர்புகள் துண்டிக்கப்படுகின்றபொழுது அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னரே நாம் அங்கிருந்து வெளிநாடு ஒன்றிற்கு சென்றிருந்தோம். இதனைப் போன்று பல போராளிகள் வெளிநாடுகளில் இருக்கின்றார்கள் 10 ஆண்டுகளுக்கு முன்னர் பிரபாகரன் இருக்கின்றார் என போலிப் படங்களை வெளியிட்டவர்களும் இவர்களே இப்படிப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்துங்கள் என கூறப்பட்டிருந்தது அதன் பின்னர் தற்பொழுது தலைவர் போன்று பேசி பணங்களை திரட்டும் நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்கின்றார்கள். பிரபாகரன் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இறந்துவிட்டார் என்பதை நான் ஆணித்தரமாக தெரிவிக்கின்றேன். அவர் மாவீரராகிவிட்டார். அவர் மாவீரர்களுக்கு எவ்வாறான கௌரவத்தை கொடுத்தாரோ அதேபோன்று அவருக்கும் அவ்வாறான கௌரவத்தை மக்களாகிய நீங்களும் கொடுக்க வேண்டும் என்பதே எனது கருத்து. போலியான பிரபாகரன் குடும்பத்தை தயார்படுத்தி வெகுவிரைவில் இப்படிப்பட்ட ஒரு கும்பல் ஒரு காணொளியை வெளியிடும் இதை பலரும் நம்புவார்கள் ஆனால் அதில் எந்த உண்மையும் கிடையாது என்பதையே நான் உங்களுக்கு கூற விரும்புகின்றேன்.

எனவே பிரபாகரன் இறந்திருந்தால் நந்திக் கடலிலே இறந்தாரா? அல்லது பொக்கனையில் இறந்தாரா? அல்லது பொக்ஸ் சமரில் இறந்தாரா? என்றெல்லாம் பார்க்க வேண்டியிருக்கின்றது. இது தொடர்பாக பல விடயங்கள் ஊடகவாயிலாக எமக்கு தெரிந்தாலும் சில விடயங்களை நாம் இதனூடாக இலங்கையில் இருந்து சில செய்திகளை வெளியிடுவது என்பது மிகவும் கடினமான விடயம். இருப்பினும் இவ்வாறானதொரு பரபரப்பான செய்தி வருகின்ற பொழுது அதற்கு கருத்து சொல்ல வேண்டிய தார்மீக கடமை எமது ஊடக நிறுவனத்திற்கு இருக்கின்றது என்ற ரீதியிலே எமது ஊடகத்திலும் இவ்வாறான செய்திகள் பிரசுரமாகியிருந்தது. பல விசாரணைகளுக்கு நாம் உட்படுத்தப்பட்டிருந்தோம். இந்த காரணங்களை எல்லாம் எங்கிருந்து எப்படி எடுத்தீர்கள் என்றெல்லாம் கேட்டிருந்தார்கள். இப்படி பிரபாகரன் வாழ்ந்ததற்கான சில இடங்கள் கூட தற்பொழுது குண்டு வைத்து அகற்றப்பட்டுள்ளது. சில நிலக்கீழ் பதுங்கு குழிகள் கூட இருந்தன. அவை கடலுக்கு சென்று வருகின்ற வழிகளை கூட பிரபாகரன் ஏற்படுத்தியிருந்தார். இதுபோன்று பல விடயங்கள் இருக்கின்றன. எனவே பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா ? இல்லையா? என்பதற்கு விடை காண வேண்டமாக இருந்தால் சில பல காரணங்களை கூற வேண்டிய பொறுப்பு உள்ளது.1500 போராளிகள் ஈழப்போரின் இறுதிகட்டத்தில் நாட்டை விட்ட தப்பிச்சென்றுள்ளனர் இந்த நிலையில் பிரபாகரனை விட்டு சென்றார்களா? என்பது ஒரு கேள்வி? இது மட்டுமன்றி விடுதலைபுலிகளின் நீர் முழ்கிகப்பல்கள் எதுவும் பிடிபடவில்லை. பாரிய வெடிச்சத்தத்துடன் ஊடறுப்பு சமர் ஒன்று இறுதியாக இடம்பெற்றது.

தொடரும்....

## முச்சக்கர வண்டி 700 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்து

முச்சக்கர வண்டியொன்று 700 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்திற்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர். தெனியாய - இறக்குவானை பிரதான வீதியின் ஐம்புகஸ்வெட்டிய பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன் போது 62 வயதுடைய ஆண் ஒருவரும், 61 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். விபத்திற்கு முச்சக்கரவண்டி சாரதியின் கவனக்குறைவே காரணம் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர். விபத்துச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




## இலங்கை மாணவர்களுக்கு இந்திய பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசில்கள்

கல்வி அமைச்சு இந்திய அரசால் வழங்கப்படும் புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளது. கல்வி அமைச்சின் கூற்றுப்படி, 2023/24 கல்வியாண்டிற்கான நேரு நினைவு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 05 முதுகலை (பிஎச்டி) புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

2023/24 கல்வியாண்டிற்கான மௌலானா ஆசாத் புலமைப்பரிசில் திட்டம்/நேரு நினைவு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இந்திய அரசு 55 முதுகலை (முதுநிலை) புலமைப்பரிசில்களையும் வழங்கவுள்ளது.

இதற்கிடையில், 2023/24 கல்வியாண்டிற்கான நேரு நினைவு/ ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 95 இளங்கலை புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கைப் பிரஜைகளுக்கான கிட்டத்தட்ட 200 முழு நிதியுதவியுடன் கூடிய புலமைப்பரிசில்கள், மருத்துவம்/பாராமெடிக்கல்/பேஷன் டிசைன் மற்றும் சட்டப் படிப்புகளை உள்ளடக்காமல், மதிப்புமிக்க இந்திய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் படிப்பதற்காக வழங்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை 08 மார்ச் 2023 அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.



**உள்ளூராட்சி தேர்தலும் கறுப்பு பணமும் எனும் கட்டுரையின் தொடர்ச்சியும் வருகின்ற வாரம் பிரசுரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.**

# சினி துளிகள்



## புஷ்பா 2 படத்தின் வாய்ப்பை நிராகரித்த சமந்தா

தெலுங்கு சினிமாவின் பிரபல நடிகர் அல்லு அர்ஜீன் நடிப்பில் 2021-ம் ஆண்டு வெளியான திரைப்படம் புஷ்பா.

இப்படத்தில் ராஷ்மிகா மந்தனா, சுனில், பகத் பாசில் போன்ற பல முன்னணி நடிகர்கள் நடித்திருந்தனர்.

இப்படத்தில் இடம்பெற்றிருந்த கவர்ச்சி பாடலுக்கு சமந்தா நடனமாடியது மிகப்பெரிய ஹிட் ஆனது. ஊ சொல்றியா பாடல் அந்த படத்தின் ப்ரொமோஷனுக்கு முக்கிய காரணமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது மயோசிடிஸ் நோயில் இருந்து மீண்டு வரும் சமந்தா, ஜிம்மில் ஒர்கவுட் செய்வதை வீடியோ எடுத்து அவரின் சோசியல் மீடியா பக்கத்தில் பகிர்ந்து வருகிறார்.

இந்நிலையில் புஷ்பா 2 படத்தில் கவர்ச்சி பாடலுக்கு மீண்டும் சமந்தா நடனம் ஆட படக்குழு அவரை அணுகியுள்ளனர்.

இதற்கு சமந்தா, "வாழ்க்கையில் நடந்த கசப்பான அனுபவங்களை மறக்க நல்ல கதைகளை தேர்ந்தெடுத்து நடிப்பது தான் சிறந்த வழி. இனி கவர்ச்சி பாதைக்கு சென்றால் அதில் இருந்து மீண்டும் வர முடியாது' என்று கூறி சமந்தா புஷ்பா 2 படத்தின் வாய்ப்பை நிராகரித்துவிட்டதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.





## சம்பளத்தை குறைத்த நடிகை

தமிழ் சினிமாவில் மிஷ்கின் இயக்கத்தில் வெளிவந்த முகமூடி படத்தின் மூலம் அறிமுகமானவர் பூஜா ஹெக்டே. அதன்பின்னர், பீஸ்ட் படத்தின் மூலம் மீண்டும் தமிழில் களம் இறங்கினார்.

தெலுங்கில் பிரபாஸ், இந்தியில் சல்மான் கான் என பல்வேறு மொழிகளில் டாப் ஹீரோக்களுடன் நடித்து முன்னணி நடிகையாக வலம் வருகிறார். பூஜா ஹெக்டே இவர் நடித்த படங்கள் தொடர்ந்து வெற்றி பெறவே தன் சம்பளத்தை ரூ.3 கோடியிலிருந்து ரூ.3.5 கோடியாக உயர்த்தியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இவர் சமீபத்தில் நடித்த "ராதே ஷ்யாம்" போன்ற படங்கள் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை என்பதால் பூஜா ஹெக்டே தனது சம்பளத்தை குறைத்துள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சொப்பன சுந்தரி படத்தின் புதிய அப்டேட்

லாக்கப் படத்தை இயக்கிய எஸ்.ஜி. சார்லஸ் இயக்கி வரும் சொப்பன சுந்தரி படத்தின் முதன்மை கதாபாத்திரத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்து வருகிறார்.

மேலும் லட்சுமி பிரியா, தீபா ஷங்கர், தென்றல் நடிகர்கள் கருணாகரன், ரெடின் கிங்ஸ்லி, மைம் கோபி உள்ளிட்ட பலர் நடித்து வருகின்றனர். ஹம்சினி என்டர்டெயின்மென்ட் மற்றும் ஹியூபாக்ஸ் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரிக்கும் இப்படத்தின் டைட்டில் புரோமோ வீடியோ அண்மையில் வெளியானது.

சொப்பன சுந்தரி டார்க் காமெடி ஜானரில் உருவாகி வரும் இப்படத்தின் படப்பிடிப்பு முழு வீச்சில் நடைபெற்று வந்தது. இதையடுத்து சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவுபெற்றது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது.

அதன்படி, "சொப்பன சுந்தரி" படத்தின் ஆடியோ விரைவில் வெளியாகும் என படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது. தற்போது இந்த போஸ்டர் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.




## லியோ படப்பிடிப்பு நிறுத்தப்படுமா?

விஜய் நடிப்பில் அடுத்ததாக வெளிவரவிருக்கும் திரைப்படம் லியோ. லோகேஷ் கனகராஜ் இயக்கிவரும் இப்படத்தில் விஜய்யுடன் இணைந்து திரிஷா, சஞ்சய் தத், அர்ஜீன், மன்சூர் அலிகான், கௌதம் மேனன் உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள்.

இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது ஜம்மு காஷ்மீரில் நடைபெற்று வருகிறது. அங்கிருந்து படப்பிடிப்பில் ரசிகர்கள் எடுக்கும் புகைப்படங்கள் மற்றும் வீடியோ கூட அவ்வப்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

இந்நிலையில், ஜம்மு காஷ்மீரில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. உலகம் முழுவதும் பல இடங்களில் ஏற்கனவே நிலநடுக்கம் ஏற்பட்டு வரும் நிலையில் தற்போது இந்தியளவில் இப்படி நடந்துள்ளது பெரும் அதிர்ச்சியை பலருக்கும் கொடுத்துள்ளது.

இந்த சமயத்தில் ஜம்மு காஷ்மீரில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கத்தால் லியோ படத்தின் படப்பிடிப்பு நிறுத்தப்படுமா என்று கேள்வி ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.



## முதல் நாள் உலகளவில் வாத்தி படத்தின் வசூல்

வெங்கி அட்லூரி இயக்கத்தில் தனுஷ் நடித்து வெளிவந்த திரைப்படம் வாத்தி. இப்படத்தில் தனுசுக்கு ஜோடியாக சம்யுக்தா நடித்திருந்தார். இதுவே இவருக்கு முதல் தமிழ் திரைப்படமாகும்.

மேலும், சாய் குமார், ஆடுகளம் நரேன், தனிகெல்லா பரணி, கென் கருணாஸ் உள்ளிட்டோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வரும் இப்படம் முதல் நாள் உலகளவில் எவ்வளவு வசூல் செய்துள்ளது என்பது குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படம் முதல் நாள் உலகளவில் ரூ. 10 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. வரும் நாட்களில் வாத்தி படத்திற்கு இன்னும் வசூல் அதிகமாக என்கின்றனர்.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

08

திருகோணமலையில் இருந்து விடுதலைப்புலிகள் வெளியேறியதும் சிறிலங்காவுக்கும் அவர்களுக்கு துணை நின்ற இந்தியாவிற்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. திருகோணமலையில் இருந்து விடுதலைப்புலிகளை அகற்றிவிட்டதாகவும் துறைமுகத்துக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் நீங்கிவிட்டதாகவும் திருமலையில் எதுவித பிரச்சனையும் இல்லை என்றும் மகிழ்ச்சியின் பூரிப்பில் சிறிலங்கா அரசாங்கம் பல அறிக்கைகளை தொடர்ந்து வெளியிட்ட வண்ணம் இருந்தது. அமைச்சர்களும் அதிகாரிகளும் இதனை பெருமைப்பட ஊடகங்களுக்கு கூறிக்கொண்டு இருந்தார்கள்.

இதே வேளை சிறிலங்கா அரசின் போர்வெறி போக்கினை உலக நாடுகளுக்கு விடுதலைப்புலிகள் எடுத்து கூறினர். ஆனால் சில உலக நாடுகள் கூறிய கருத்துக்களை பொருட்டாக கூட எடுக்காமல் செவிடன் காதில் ஊதிய சங்கு போல சிறிலங்கா அரசு நடந்து கொண்டது. சிறிலங்கா அரசின் இந்த நடவடிக்கைகள் இந்த போருக்கு பின்னால் பலம் பொருந்திய கரங்கள் இருக்கின்றன என்பதை புரியவைத்தன. ஏனெனில் விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்தை மீறுகின்றார்கள் என குற்றம் சாட்டிய சில சர்வதேச நாடுகள் கூட சிறிலங்கா அரசாங்கம் வெளிப்படையாக போரை நடத்தியபோது மௌனமாக இந்த போரை வேடிக்கை பார்த்தன.

தமிழர் பிரச்சனையில் எவ்வாறு உலக நாடுகள் பேச்சளவில்ஈடுபட்டனவோ அதேபோன்றுதான் இன்றும் உலக நாடுகளின் செயற்பாடு பேச்சில் மட்டுமே இருக்கின்றன. திருகோணமலையில் இருந்து விடுதலைப்புலிகள் அகற்றப்பட்டதாக குறிப்பிட்ட நிலையில் அங்கிருந்து போர் நிறுத்த கண்காணிப்பு குழு வெளியேறியது. கண்களை மூடிய நிலையில் இருந்த போர்நிறுத்த கண்காணிப்பு குழு திருமலையில் இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன என்ற நிலையில் தான் தமிழ் மக்கள் மத்தியில் அப்போது காணப்பட்டது. அத்துடன் போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் செயற்பாடு ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறு தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா படையினரின் போர்நிறுத்த மீறல்களை கண்டும் காணாதது போல இருந்த போர்நிறுத்த கண்காணிப்பு குழு விடுதலைப்புலிகள் ஏதும் செய்து விட்டால் அதனை தூக்கி பெரிதாக்கி காட்டுவதும் மற்றும் மாதத்தில் எத்தனை போர்நிறுத்த மீறல்கள் நடைபெற்றுள்ளன எத்தனை தாக்குதல்களை விடுதலைப்புலிகள் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார்கள். படையினர் எத்தனை தாக்குதல்கள் எத்தனை போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டார்கள் என்பதை குறைத்து காண்பித்து அவர்களுக்கு உதவி புரிந்தார்கள் சிறிலங்கா படையினரின் போர்நிறுத்த மீறல்கள் அதாவது வலிந்த போர்கள் கூட பெரிதாக கணக்கில் எடுக்கப்படவில்லை.

சிறிலங்கா படையினரின் போர்நிறுத்த மீறல்களில் எண்ணிக்கையை தமது பதவியின் படி கண்காணிப்பு குழுவினர் குறைத்தே குறிவைத்து அவர்களின் நடுநிலை தொடர்பான சில கேள்விகளையும் எழுப்பியிருந்தது. போர்நிறுத்த குழுவின் இவ்வாறான சில செயற்பாடுகள் ஈழ விடுதலை போரை கண்காணித்து கொண்டிருக்கும் வல்லரசு நாடுகளிடையே விடுதலைப்புலிகள் தொடர்பாக மேலும் தவறான எண்ணங்கள் ஏற்படுவதற்கு வழிவகுத்து கொடுத்தது. காரணம் போர்நிறுத்த கண்காணிப்பு குழுவில் பல நாட்டு பிரஜைகள் இருந்தார்கள். இவர்களின் அறிக்கைகள் புள்ளிவிபர வெளியீடுகள் அனைத்தும் உண்மையாகத்தான் இருக்கும் என்பது சர்வதேச நாடுகளின் எண்ணமாக இருந்தது. விடுதலைப் புலிகளின் அரசியல் போக்கு குறித்து எதிர்மறையான எண்ண கணிப்பீட்டினை இவர்களின் அறிக்கைகளும் புள்ளிவிபரங்களும் தோற்றுவித்தன. இதேவேளை சமாதான செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த நோர்வே நாட்டின் செல்வாக்கினை பயன்படுத்தி விடுதலைப்புலிகள் பல வேலைத்திட்டங்களை செயற்படுத்துகின்றார்கள்.

வேலைத்திட்டங்களுக்கான நிதி வடிவிலான உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன. அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வழிகாட்டலில் அரசியல் பிரிவு பொறுப்பாளராக இருந்த பிரிக்கேடியர் சு.ப. தமிழ்செல்வன் இந்த உதவிகளை பெரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார். இதேவேளை அரசியல் பிரிவின் செயற்பாடு பலம் பொருந்திய செயற்பாடாக காணப்படுகின்றது. காரணம் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் திட்டமிடலில் ஏனைய நாடுகளுடனான ராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக்கொண்டு விடுதலை போராட்டத்திற்கு வலு சேர்கின்றார்கள். இதில் சில நாடுகள் நிதி வடிவிலும் ஏனைய வடிவங்களிலும் உதவிகளை வழங்கி தமிழர் விடுதலை போராட்டத்திற்கு மறைமுகமாக உதவிகளை மேற்கொள்கின்றன. உதவிய இந்த நாடுகளால் இவ்வாறான உதவிகளை மேற்கொள்ளலாமே தவிர இலங்கையில் கால் ஊன்ற முடியாத நிலை. காரணம் பிராந்திய வல்லரசாக விளங்கும் இந்திய பக்கத்தில் கண்ணுக்குள் எண்ணையை ஊற்றி இலங்கையை பார்த்துக் கொண்டு இருக்கிறது. இந்தியாவின் மறைமுக செயற்பாடுகள் இலங்கையில் கால் ஊன்றி இருப்பதை இந்த நாடுகள் அறிந்திருந்தன. இதனாலேயே அவை தமது தலையீட்டினை இலங்கையில் குறைத்துக்கொண்டன.

திருமலையில் இருந்த விடுதலைப்புலிகள் வெளியேறியநிலையில்அங்குள்ளதமிழ்மக்கள் மீது கெடுபிடிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக திருகோணமலையில் கடற்படையினரும் தரைப்படையினரும் குவிக்கப்பட்டு வீதி சோதனைகள் அதிகரிக்கப்படுகின்றன. சந்தேகத்தின் பெயரில் மக்கள் கைது செய்யப்படுகின்றார்கள். இவ்வாறு நெருக்கடியான நிலையில் திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களின் பிரச்சனைகளை எடுத்து கூறியவர்களில் மாமனிதன் விக்னேஸ்வரன் செயற்பட்டார். திருமலையில் தமிழ் மக்கள் பேரவையின் தலைவராக இவர் இருந்தார். திருகோணமலையில் எங்கும் சிங்களவர்கள் சிங்கள மொழியின் செல்வாக்கே அரச நிர்வாகங்களில் 90 வீதத்திற்கும் மேலாக காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தின் அரசாங்க அதிபராக சிங்கள படையில் இருந்து ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளே நியமிக்கப்படுகின்றார்கள்.

இந்த இராணுவ அதிகாரிகளின் திட்டங்கள் அபிவிருத்திகள் எல்லாம் எவ்வாறு இருக்கும் என்பது சொல்லி தெரியவேண்டியது இல்லை. குறிப்பாக சிங்களவர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கே வளங்கள் அனைத்தும் இவரால் திருடப்பட்டு விடும் அத்துடன் சிங்கள மொழியின் செல்வாக்கு இல்லாமல் திருகோணமலையில் ஒன்றுமே செய்யமுடியாத நிலை தமிழ் மக்கள் படிவம் ஒன்றை நிரப்பவேண்டும் என்றாலும் சிங்கள மொழியில் தான் நிரப்ப வேண்டும் என்ற கட்டாயம் மதம் ரீதியில் பௌத்த மதம் பரப்பப்படுகின்றது. மொழியாக சிங்களம் திணிக்கப்படுகின்றது. தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் கூட பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன என கோணேஸ்வர ஆலயத்திற்கு ஏறும் வழியில் கூட புதிய பௌத்த சின்னம் ஒன்று நிறுவப்பட்டு உள்ளது. இவ்வாறு திருகோணமலையில் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். கடல் வலைய தடைச்சட்டம் போடப்பட்டு திருகோணமலை கடலில் மீன்பிடிக்க கட்டுபாடு விதிக்கப்படுகின்றது. இங்கு குறிப்பாக தமிழ் மக்களே கடல் தொழிலை முதன்மையாக கொண்டு வாழ்ந்தார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகின்றது. அதாவது குறிப்பிட்ட நேரம் மட்டுமே மீன் பிடிக்கலாம் அதுவும் வலு கூடிய இந்திரங்கள் படகில் பொருத்தக்கூடாது படகில் இரண்டு பேருக்கு மேல் போகக்கூடாது என்று பல தடைகள் போடப்படுகின்றன. திருமலை கடலில் மீன்கள் நடமாட்டம் கூடுதலாக காணப்படும் சில இடங்கள் இருக்கின்றன. இவ்வாறான இடங்களில் எல்லாம் மீன் பிடிக்க கூடாது என்றெல்லாம் சட்டம் இவை ஒருபுறம் இருக்க தென் பகுதியில் இருந்து பெருமளவான சிங்கள மீனவர்கள் தொழிலுக்காக திருகோணமலை வருகிறார்கள். (சிங்களவர்களால் வரவழைக்கப்படுகிறார்கள் என்றே குறிப்பிடலாம்) கடலில் தொழில் செய்கிறார்கள் தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட தடைகள் சிங்கள மீனவர்களுக்கு இல்லை. துறைமுக வாயில் துறைமுகத்திற்குள் எல்லாம் சிங்கள மீனவர்கள் மீன் பிடிக்கின்றார்கள். அதன் மூலம் பெருமளவு வருமானம் ஈட்டி கொள்கிறார்கள். தமிழ் மீனவர்கள் தமது குடும்பத்தை கொண்டு நடத்த திண்டாடுகின்றார்கள். இவ்வாறே விவசாய ரீதியிலும் கந்தளாய் குளத்தின் கீழ் பெருமளவான நிலப்பரப்பில் சிங்கள விவசாயிகளே செய்கை பண்ணுகிறார்கள்.



தமிழ் முஸ்லிம் மக்களின் விவசாய உற்பத்தி சிங்களவர்களுடன் ஒப்பிடும் இடத்தில் குறைவாகவே காணப்படுகின்றது. சிங்கள மக்களின் விவசாய உற்பத்தி பொருட்கள் கூடிய விலையிலும் தமிழ் மக்களின் விவசாய உற்பத்தி பொருட்கள் குறைந்த விலையிலும் சிங்களவர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றன. சிங்கள விவசாயிகளுக்கு இலவசமான உள்ளேடுகள் குறைந்த விலையில் மானியங்கள் என்றெல்லாம் வழங்கப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வு காணப்பட வேண்டும் என்று தான் அன்று திருகோணமலையில் தமிழ் மக்கள் பேரவை தலைவராக இருந்த விக்னேஸ்வரன் சிறிலங்கா அரசுக்கும் பன்னாட்டு துறை சார்ந்தவர்களுக்கும் அறிக்கைகள் ஊடாக வாரம் ஒரு பிரச்சனை என்று தொடர்ச்சியாக வெளிப்படுத்தினார். வெளிப்படுத்திக்கொண்டே இருந்தார் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு புரியும் பல கொடுமையான உண்மைகள் இவர் அறிக்கைகள் மூலம் அம்பலமாகியது. இவ்வாறு இவரின் செயல்பாடுகளை பார்த்து பொறுக்கமுடியாமல் தான் சிறிலங்கா அரசின் திட்டமிடலுக்கு அமைய தமது கண்ணை தமது கையாலே குத்துவது போல் தமிழ் இனதுரோகிகளை கொண்டு தமிழர்களின் விடிவிற்காய் உழைத்த இவரை கொல்ல திட்டம் தீட்டப்படுகின்றது.

தொடரும்...

# ரணில் ஒரு ராஜதந்திர நரி!

கடந்தவார தொடர்ச்சி...

உங்களது ஆசனாங்களையும் கட்சிகளையும் நடவடிக்கைகளையும் வளர்த்துக்கொண்டு போக வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்கினீர்களே தவிர மற்றும் படி எதையுமே நீங்கள் சாதித்தது இல்லை. மக்கள் முன்னிலையில் மக்களுக்காக நீங்கள் எதை செய்யப்போகின்றீர்கள் என்பதை நிச்சயமாக வெளிக்காட்ட வேண்டும். தொடர்ந்தும் மக்களை ஏமாற்றக்கூடாது. ஒரு தேர்தல் அரசியல் என்று வருகின்ற பொழுது உங்களது கட்சியை பலப்படுத்த வேண்டும் என்பதற்காக யாரை உள் வாங்கலாம் யாரை வெளியேற்றலாம் என உங்களது நடவடிக்கைகளை செய்துகொண்டிருக்கின்றீர்கள்.

ஆனால் தமிழ் மக்களின் பிரச்சனை என்னும் பொழுது உள்ளுருக்குள்ளே நீங்கள் அடிபடுங்கள் அதை சட்டம் பார்த்துக்கொள்ளும் அது வேறு விடயம். ஆனால் தேசிய பிரச்சனை என்னும் பொழுது தமிழ் மக்களுக்கான தேசிய பிரச்சனையில் இருந்து நாங்கள் விடுபட வேண்டுமாக இருந்தால் எங்களுக்கான தீர்வு திட்டத்தை அடைய வேண்டுமாக இருந்தால் நாங்கள் மூன்று முறைகளிலும் அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் ரீதியான தாக்குதல்களை நடத்திக்கொண்டே இருக்க வேண்டும். தென்னிலங்கையிலே குழப்பங்கள் உருவாக்கப்படுகின்ற பொழுது பௌத்த தேரர்கள் தமக்கு தேவையானவர்களை கொண்டு வருவதற்காக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தமிழர்களையும் உள்வாக்கிக்கொள்கின்றார்கள். அதற்கு ஆதரவாக டக்ளஸ் தேவானந்தா பிள்ளையான் தமிழரசுக் கட்சி போன்றவர்கள் ஆதரவளிக்கின்றார்கள்.

எனவே எங்களது இலக்கு அதாவது இன்று போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையிலே தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வுதிட்டம் வரவேண்டும் என்பதை பற்றி தான் நாங்கள் பேசுகின்றோம். மீண்டும் இந்த நாட்டில் ஆயுத போராட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று கூறவில்லை. அதாவது ஆயுத போராட்டம் மற்றும் இரத்தம் சிந்திய காலகட்டம் எல்லாம் இல்லாமல் ஆக்கப்பட்டு தற்பொழுது ஒரு சுமூகமான நிலைக்கு வந்துள்ள நிலையில் இன்று அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் நடவடிக்கைகளை ஏன் உங்களால் செய்ய முடியாமல் இருக்கின்றது என்பது பற்றி கட்சிகள் ஒவ்வொருவரும் உங்களை நீங்கள் சீர்தூக்கி பார்க்க வேண்டும்.

உங்களது நடவடிக்கைகள் அரசாங்கத்துடன் ஒத்ததாக தொடர்ந்தும் செய்கின்ற பொழுது உங்களது கதிரைகளையும் உங்களது ஆசனாங்களையும் தக்கவைக்க வேண்டும் என்று நினைக்கும் பொழுது நிச்சயமாக மக்கள் உங்களுக்கு தீர்ப்பு சொல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை. நீங்கள் தான் தொடர்ந்தும் மக்களை போராட்ட சகதிக்குள் கொண்டு செல்லுகின்றீர்கள் தொடர்ந்தும் இந்த போராட்டம் உருவாகுவதற்கு இப்படிப்பட்ட அரசியல்வாதிகள் தான் இதற்கு காரணமாக இருக்கின்றீர்கள் ஒன்றுபடுகின்றோம் என்ற தோரணையிலே பிரிந்து செல்லுகின்றீர்கள். உங்களது கட்சி நலனிற்காக ஒருவருக்கு குழிபறிக்கின்றீர்கள். எல்லோரும் பேசிக்கொள்வார்கள் ஏன் தமிழீழ விடுதலைப்புலிகளை இணைத்துக்கொள்ளவில்லை என்று. அன்று மாகாணசபை தேர்தல் இடம்பெறுகின்ற பொழுது தமிழரசுக் கட்சியை அப்பொழுது ரெலோ புளொட் ஈ.பி.ஆர்.எல்.எப் எல்லாமே ஒரு மேசையில் தான் இருந்தது.

அப்பொழுது ஜனநாயக போராளிகள் கட்சி சார்பாக துளசி அவர்களும் முன்னாள் ஊடகவியலாளர் வித்யாதரன் அவர்களும் வந்திருந்தார்கள். என்ன நடந்தது இறுதியாக அவர்கள் ஒரு ஆசனத்தையேனும் கேட்டுப்பார்த்தார்கள் கொடுக்கவில்லை. இராணுவ புலனாய்வாளர்களுடன் ஒத்து நடக்கின்றார்கள் என்று சொல்லி அன்றிருந்த ரெலோ.புளொட்.ஈ.பி.ஆர்.எல்.எப்.தமிழரசுக் கட்சி அனைத்தும் கூட்டாக இணைந்து ஒரு ஆசனம் கூட அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்கள் அங்கிருந்து குழம்பிக்கொண்டு அனைவரும் வெளியேறினார்கள். தற்பொழுது DTNA ஆக இணைந்துகொண்டதன் பின்னர் ரெலோ.புளொட் ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகள் இன்று ஜனநாயக போராளிகளை தமது வாசிக்காக இணைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இது இவர்களது தேர்தல் அரசியல் எனவே ஒரு ஜனநாயக வழியிலே எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு இந்த பௌத்த பேரினவாதிகள் எப்படி தென்னிலங்கையிலே தமது கையை ஓங்கி பலமாக கோசத்தை எழுப்பி 13 ஐ எதிர்த்து தமிழ் மக்களுக்கு வருகின்ற எந்த நடவடிக்கைகளுக்கும் போகக்கூடாதுஎன்பதற்காகதடுப்புநடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் வருங்காலத்தில் தமிழர்கள் எப்படி வந்துவிடுவார்கள் என்ற சிந்தனையுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். எனவே தமிழ் தரப்பு வெறுமனே தேர்தல் அரசியல் என்று பார்க்காமல் தற்பொழுது 13 க்கு எதிராக கொழும்பிலே பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. பௌத்த பேரினவாதிகளால் இந்த நெருக்கடி கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

ரணில் விக்ரமசிங்கவின் தலைமையை கூட மாற்றுமளவிற்கு பௌத்த பேரினவாதிகள் செயற்படுவார்கள் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை. எனவே தமிழ் தரப்பு அதாவது காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பது போன்று இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது அகிம்சை போராட்டங்களை வெளிப்படுத்தி தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்தில் நாம் முக்கிய பங்கெடுத்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதே இன்றைய களத்தின் பார்வையாக இருக்கின்றது.



இரணியன்

# தமிழ் தேசிய மக்கள் முன்னணி 13ஐ ஏன் எதிர்க்கின்றது? பௌத்த பேரினவாதிகள் ஏன் எதிர்க்கின்றார்கள்?

கடந்தவார தொடர்ச்சி...

பல்கலைக்கழக மாணவர்களுக்கு நீங்கள் உண்மையிலே இந்த ஒற்றையாட்சி 13 ஆம் திருத்தத்தை நிராகரிப்பதாக இருந்தால் உங்களது பிரகடனத்தில் அதை மிகத் தெளிவாக பதிவு செய்யுங்கள். ஒற்றையாட்சியிலே இருக்கின்ற எதுவுமே 13 ஆம் திருத்தம் உட்பட ஏன் ரணில் விக்ரமசிங்க. மைத்திரிபால சிறிசேன தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரிவதற்கு முதல் இவர்கள் அனைவரும் ஒன்றாக இருந்த காலத்தில் ரணில் விக்ரமசிங்க மைத்திரிபால சிறிசேனவுடன் தயாரித்த ஏ.கே ராஜ இடைக்கால அறிக்கை ஒற்றையாட்சிக்குள் இருக்கின்றது. அதையும் குறிப்பிட்டு இப்படி ஒற்றையாட்சிக்குள் இருக்கின்றது யோசனைகள் எதுவுமே ஒரு ஆரம்ப புள்ளியாக கூட கருத முடியாது என்பதை பதிவு செய்யுங்கள். அதை நீங்கள் பதிவு செய்தால் நாங்கள் முழுமையாக ஒத்துழைக்க தயார் என்று கூறிய இடத்தில் அவர்கள் ஏன் அதை பதிவு செய்யவில்லை.

உண்மையில் நீங்கள் பொங்கு தமிழ் கோட்பாட்டிற்கு நேர்மையாக இருக்க தயார் என்றால் உங்களுக்கு என்ன பிரச்சனை இதை பதிவு செய்வதற்கு? ஏன் நீங்கள் இதை மறுக்கின்றீர்கள்? இதை பதிவு செய்வதை. இதை நிராகரிப்பதை மறுக்க விரும்பும் தரப்புகள் ஓடையில் தானே நீங்கள் கூட்டு சேர்ந்து இந்த நடை பயணத்தை மேற்கொண்டனீர்கள் அப்படி மேற்கொள்ளுகின்ற இடத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி 13 வருடங்களிற்கு முன்னர் இந்த 13 ஆம் திருத்தத்திற்குள் தான் கூட்டமைப்பிற்குள் இருக்கின்ற அத்தனை தரப்புக்களும் தமிழ் அரசியலை முடக்கப்போகின்றார்கள் என்று கூறித்தான் நாங்கள் வெளியேறினோம். நாங்கள் எங்களது மக்களிடம் இந்த விடயங்களை சொல்லிக்கொண்டுவருகின்றோம். மக்களும் இன்று தான் அந்த உண்மைகளை அறிந்துகொள்ளுகின்றார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழலில் அதே தரப்புக்கள் வைத்துக்கொண்டு அவர்களை கொண்டாடிக்கொண்டு பயணிக்கின்ற இடத்தில் நாங்களும் கலந்துகொண்டால் மக்களுக்கு நாங்கள் என்ன செய்தியை கொடுக்கின்றோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் தரப்புக்கள் செய்தால் பிழை பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் செய்தால் சரி என்றா கூறுகின்றோம்? எங்களது அமைப்பில் அப்படியான இரண்டு நிலைப்பாடுகளை வைத்துக்கொண்டு நாங்கள் அரசியல் செய்யும் தரப்பு அல்ல. எந்தளவிற்கு கூட்டமைப்போ அரசியல் தரப்புகளோ பிழை செய்தால் அதை பிழை என்று சொல்லுகின்றோமோ. வேறு தரப்புகள் வந்து அதே பிழையை செய்தால் அதையும் பிழை என்று தான் நாங்கள் கூறுவோம். இன்றும் நாங்கள் தெளிவாக கூறுகின்றோம். பல்கலைக்கழக சமூகம் அல்ல பல்கலைக்கழக மாணவர்களினது ஒன்றியம் பிழையாக வழிநடத்தப்படுகின்றார்கள். அவர்கள் அதை உணர்ந்து சரியான வழிகளில் செல்லத் தொடங்கினால் எதிர்காலத்தில் எங்களது முழு ஆதரவும் கொடுக்கத் தயார். ஆனால் அதைத் தவிர்த்து அவர்கள் தொடர்ந்தும் மிகப் பிழையான தரப்புகளோடு அவர்கள் கையாளப்படும் ஒரு பாதையில் தான் செல்லப்போகின்றார்களாக இருந்தால் அது அவர்கள் எங்களை தவிர்த்து போகவேண்டிய ஒரு பாதையாகத்தான் இருக்கும்.

# 66% மின் கட்டண அதிகரிப்பு : புதிய மின் கட்டண திருத்தம் தொடர்பான முழுவிபரம்

அன்று (15) முதல் அமுலாகும் வகையில். 66% மின் கட்டண அதிகரிப்பிற்கு இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது. ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தவிர்ந்த ஏனைய 03 உறுப்பினர்களின் இணக்கப்பாட்டிற்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபைக்கு மேலதிகமாக 287 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டும் நோக்கில். அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்ட 66% மின் கட்டண அதிகரிப்பு யோசனை கடந்த மாதம் 02 ஆம் திகதி இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த யோசனைக்கு இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன். ஆணைக்குழுவின் சில உறுப்பினர்கள் பதவிகளை இராஜினாமா செய்தனர். வெற்றிடம் ஏற்பட்ட பதவிகளுக்காக புதிய உறுப்பினர்கள் மூவர். 02 சந்தர்ப்பங்களில் நியமிக்கப்பட்டதுடன். மின் கட்டண அதிகரிப்பு தொடர்பான யோசனை குறித்த கலந்துரையாடல் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவரின் தலைமையில் நடைபெற்றது. பொது பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் ஏனைய அனைத்து தரப்பினரின் யோசனைகளுக்கு அமைவாக. 142 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும் வகையில். 36% மின் கட்டண அதிகரிப்பிற்கு ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டதுடன். குறித்த யோசனை ஜனக்க ரத்நாயக்கவினால் அன்று (14) முன்வைக்கப்பட்டது. எவ்வாறாயினும். குறித்த யோசனைக்கு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க மாத்திரம் இணக்கம் தெரிவித்தமையினால். அது நிராகரிக்கப்பட்டது. பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களான சட்டத்தரணி சதுரிக்கா விஜேசிங்க. டக்ளஸ் நாணயக்கார மற்றும் S.G.சேனாரத்ன ஆகியோரே குறித்த யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதற்கமைய. ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் இணக்கத்தின் அடிப்படையில். மின் கட்டணத்தை 66 வீதத்தால் அதிகரிப்பதற்கான யோசனை நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில். மின் கட்டணப் பட்டியல் தயாரிக்கப்படும் விதம் தொடர்பில் ஆணைக்குழுவும் இலங்கை மின்சார சபையும் விளக்கமளித்துள்ளன.

## புதிய மின் கட்டண திருத்தங்களுக்கு அமைவாக,

**60 அலகுகளை பயன்படுத்தும் வீடொன்றுக்கான மின் கட்டணம் 276 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கமைய, 60 அலகுகளை பயன்படுத்தும் வீடொன்றுக்கான மின் கட்டணத்திற்கு இதுவரை நடைமுறையிலிருந்த 680 ரூபா கட்டணத்தொகை 2560 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.**

**புதிய கட்டணத் திருத்தத்திற்கு அமைவாக, 30 அலகுகள் பயன்பாட்டை கொண்ட வீடொன்றுக்கு இதுவரை காணப்பட்ட 360 ரூபா மின் கட்டணம் 1300 ரூபா வரை அதிகரிக்கப்படும். இது 261% அதிகரிப்பாகும்.**

**90 அலகு பயன்பாட்டிற்காக இதுவரை அறவிடப்பட்ட 1800 ரூபா மின் கட்டணம், புதிய திருத்தத்திற்கு அமைவாக 4430 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.**

**200 அலகுகளுக்கும் மேற்பட்ட மின்சார பாவனையைக் கொண்ட வீடுகளுக்காக மின் கட்டணம் 32 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.**

**இந்த புதிய கட்டண திருத்தத்தின் கீழ் சாதாரணமாக வீடொன்றில் பயன்படுத்தப்படும் மின்சாரம், 900 அலகிற்கான பிரிவிற்குள் உள்ளடங்கி, மின் கட்டணம் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.**

**இந்த மின் கட்டண அதிகரிப்பு யோசனைக்கு இலங்கைப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது.**

**மின்சார சபையினால் கோரப்பட்டிருந்த மின் கட்டண திருத்தத்தில் எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளாமல் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**மின்சார சபை கோரிய கட்டண திருத்தத்தின் அடிப்படையில், பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மின்சார கட்டண முறையை முன்மொழிந்த போதிலும், ஆணைக்குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அதற்கு அங்கீகாரம் வழங்கவில்லை.**

# மகளிர் பக்கம்



## நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறதா அப்பிள் !!

தினமும் ஒரு அப்பிளை சாப்பிட்டால் புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் இதயம் தொடர்பான நோய்கள் ஏற்படும் அபாயம் குறைகிறது. அப்பிளில் விட்டமின் சி சீரான அளவில் உள்ளது.


அப்பிளில் உள்ள மாலிக் அமிலம் மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கிறது. குடல் பாதையில் உள்ள தேவையற்ற நுண்கிருமிகளை கொல்கிறது. அப்பிளை நன்கு மென்று சாப்பிட்டால் வாய் மற்றும் தொண்டைப் பகுதிகளில் உள்ள நுண்கிருமிகள் அழிகிறது.

அப்பிளில் உள்ள ஃபைபர் ரத்த அழுத்தத்தை ஒரே சீராக வைத்திருக்க உதவும். ரத்த நாளங்களை தளர்த்துவதற்கு அப்பிள் பழத்தில் உள்ள பொட்டாஷியம் உதவுகிறது. உயர் ரத்த அழுத்தம் மற்றும் இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அப்பிள் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வரலாம்.

அப்பிள் பழத்தில் உள்ள 'விட்டமின் சி' சத்து இதய ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், எலும்புகளை வலுப்படுத்தவும் உதவுகிறது.

வயதானவர் போன்ற தோற்றத்தை கொடுக்கும் முகச்சுருக்கங்களை போக்க அப்பிள் ஒரு சிறந்த நிவாரணியாகும். அப்பிளை மையாக அரைத்து முகத்தில் தேய்த்து வந்தால், விரைவில் முகச்சுருக்கங்கள் நீங்கி சருமம் புதுப்பொலிவு பெறும்.

அப்பிள் பழமானது குடல் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் உள்ளிட்ட பலவித ஆபத்தான புற்று நோய்கள் நம்மை அண்ட விடாமல் தடுக்கிறது.



அழகான பொருட்கள்
எல்லாம்
உன்னை
நினைவுபடுத்துகின்றன
உன்னை
நினைவுபடுத்துகின்ற
எல்லாமே அழகாக
தான் இருக்கின்றன



## கூந்தல் பளபளக்க

1. கூந்தல் பளபளப்புடன் இருக்க வாரம் ஒரு முறை ஆலிவ் எண்ணெயைக் கொதிக்க வைத்துத் தலையில் நன்றாகத் தேய்க்க வேண்டும். சுத்தமான ஆலிவ் எண்ணெய் மருந்துக் கடைகளில் கிடைக்கும். தலையில் தடவுவதற்கு எத்தனையோ விதம் விதமான ஹேர் ஆயில்கள் இன்று இருக்கின்றன. இந்த ஹேர் ஆயில்களெல்லாம் தலைமுடியின் ஆயுளைக் குறைத்து விடுகின்றன. சுத்தமான நல்லெண்ணெயையும் சுத்தமான தேங்காயெண்ணையும் தவிர வேறு எதையும் தலையில் படவிடக் கூடாது.

2. சிறிது சாதம் வடித்த கஞ்சியில் ஷாம்பூவை ஊற்றி கலந்து தலையில் தேய்த்து குளித்துப் பாருங்கள் எண்ணெய்ப் பசை மற்றும் அழுக்கு நீங்கி கூந்தல் பட்டுப் போல் பளபளக்கும்.

3 . தலைமுடி வறண்டு, சீராக இல்லாமல் இருந்தால் முகத்தின் தோற்றப் பொலிவும் குறையும். ஆகவே மறுநாள் காலையில் விழா என்றால் முதல் நாள் இரவில் கூந்தலை சீராக்குவது அவசியம். முதல் நாள் மாலையில் கூந்தலை எப்போதும் போல் ஷாம்பு மற்றும் சீயக்காய் வைத்து அலசி விடவும். அடுத்தநாள் கூந்தலை அலசி, துடைத்து விட்டு அலங்காரம் செய்தால் கூந்தல் பளிச்சென இருக்கும். முகமும் தோற்றப் பொலிவுடன் அனைவரையும் கவரும். அழகு நிலையங்களுக்கு சென்று தலை முடியை கலரிங் செய்து விட்டு, ஷாம்பு மூலம் சுத்தம் செய்யும் போது கூந்தலில் உள்ள சில சத்துக்கள் அழிந்து போகும். இதற்கு வீட்டில் ஷாம்பு போட்டு முடித்த பின்னர், தண்ணீரில் கொஞ்சம் வினிகரை கலக்கி கூந்தலை கழுவி அலசவும். இதனால் கூந்தல் பளபளப்பாகும்.



## கடலைப் பருப்பு பக்கோடா

**தேவையானவை:**

கடலைப் பருப்பு - 1 கப்,
பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயம் - அரை கப்,
இஞ்சி - 1 துண்டு,
பச்சை மிளகாய் - 2,
பூண்டு - 4 பல்,
புதினா, மல்லித்தழை, கறிவேப்பிலை -தலா சிறிதளவு,
சோம்பு - அரை டீஸ்பூன்,
உப்பு - சுவைக்கேற்ப,
எண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:**

கடலைப் பருப்பை ஒரு மணி நேரம் ஊறவையுங்கள். இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய்மூன்றையும் சேர்த்து நசுக்கிக் கொள்ளுங்கள். சோம்பைப் பொடித்துக் கொள்ளுங்கள். கறிவேப்பிலை,மல்லித்தழை, புதினா மூன்றையும் பொடியாக நறுக்குங்கள். கடலைப் பருப்பை சற்றுக் கரகரப்பாக அரையுங்கள். எண்ணெய் நீங்கலாக, மற்ற பொருட்களை கலந்து பிசறி, காயும் எண்ணெயில் கிள்ளிப் போட்டு, வேக விட்டெடுங்கள். சிற்றுண்டியாக சாப்பிடுவதற்கும் காரக்குழம்பு, மோர்க்குழம்பில் போடுவதற்கும் ஏற்ற பக்கோடா இது.



## அழகாக இருக்க!– 12 வழிகள்!

1.யாருடனும் ஒப்பிடாதீர்கள். நீங்கள் தனித்தன்மையானவர் என்பது உண்மை. ஒவ்வொருவரும் தனித்தன்மையானவர்கள். ஒவ்வொருவர்களுக்கும் கொஞ்சம் தாழ்வு மனப்பான்மை, பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். அதனால் ஒப்பிட்டுப் பார்ப்பதால் எந்தப்பயனும் இல்லை.

2.உங்கள் பழக்க வழக்கங்களை உயர்த்தி மெருகேற்றுங்கள். அன்பாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அன்பால் உங்கள் முகம் பிரகாசம் அடையும். அன்பே உங்கள் முகத்துக்கு அழகைத்தரும்.

3.உங்களைச் சுற்றி வசீகர அலைகளைப் பரப்பவேண்டுமா? சிரியுங்கள். உங்கள் நண்பர்களுடன் இருக்கும்போது உங்கள் சிரித்த முகம் அவர்களை உங்கள்பக்கம் திருப்பும். உங்கள் மன அழகு உங்கள் உடல் அழகை விஞ்சும். உங்களை வசீகரமானவர்களாக மாற்றும்.

4.உடலை கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ளுங்கள். உடல் சுகாதாரமாக இருந்தால்தான் உற்சாகமாக இருக்கமுடியும். உடலில் பொங்கும் வலிமையும், சக்தியும் உங்களை சோர்வில்லாமல் இருக்க வைக்கும். சோர்வில்லாமல் உற்சாகமாக இருக்கும் உங்களை எல்லோருக்கும் பிடிக்கும்.

5.உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அது உங்கள் குழுவிலிருந்து உங்களைத் தனித்துக் காட்டும். பாட்டு, டான்ஸ் போன்றவற்றில் இருப்பவர்கள் ஈர்ப்பின் மையமாக இருப்பதைப் பார்க்கிறோம். முகம் அழகானவர்களை விட திறமைசாலிகள் கொடிகட்டிப்பறப்பதை நாம் காண்கிறோமல்லவா!

6.உங்களிடம் இருக்கும் திறமைகளை வளர்த்துக்கொண்டீர்கள். அது உங்களைச் சுற்றியுள்ளோருக்குத் தெரியவேண்டுமே!! கல்லூரியில் நுழையும் முதல் வருடத்திலேயே திறமையை வெளிப்படுத்துபவர்களைச் சுற்றி ஒரு நட்புக்குழுவே உருவாகுவதை எல்லோரும் கண்டிருப்போம். திறமைகளைப் பூட்டி வைக்க வேண்டாம். உங்கள் அறிவு, திறமை ஆகியவற்றை உக அழகிப்போட்டியில் கூட சோதிப்பதைக் கண்டிருப்பீர்கள்!

7.நோகடிக்கும், பிறரைக் குறை சொல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். எல்லோரிடமும் குறையிருக்கும். இதைப் பெரிது படுத்தாதீர்கள். பெருந்தன்மையாக பாராட்டிப் பேசும் உள்ளத்தை எல்லோருக்கும் பிடிக்குமே!!

8.உன்னால் முடியாது என்று சொல்லும் நபர்களைக் கண்டுகொள்ளாதீர்கள். திறம்பட செய்யமுடியும் என்ற நம்பிக்கை எண்ணமே உங்களைத் தனித்தன்மையுடன் காட்டும்.

9.உங்கள் உள்ளேயே ஒரு குரல் அவநம்பிக்கையை ஏற்படுத்தும். ஒவ்வொரு சிறந்த செயல்பாட்டையும் அது தடுத்துவிடும். தள்ளிப்போடும். முடங்கிப்போய் இருப்பவர்கள் அழகாகக் காட்சியளிக்க முடியாது.

10.பொறாமையை விட்டுத்தள்ளுங்கள். பிறருடைய திறமை, பணம், புகழ் ஆகியவற்றைப் பார்த்துப் பொறாமைப் படுவதைவிட உங்கள் வாழ்வை, செயல்களைத் திருப்திகரமாகச் செய்து பாருங்கள். உங்கள் உள்ளத்திருப்தி உங்கள் முகப் பொலிவைக் கூட்டிவிடும்.

11.உங்களுக்கே உங்களைப் பிடிக்காமல் இருக்கலாம். உங்களிடம் உங்களுக்குப் பிடிக்காத பட்டியல் நிறைய இருக்கும். அதையெல்லாம் புறந்தள்ளுங்கள். உங்கள் முக அமைப்பையோ, நிறத்தை,உயரத்தைப் பற்றியெல்லாம் படும் கவலைகளை விட்டொழியுங்கள். உங்களை நீங்கள் விரும்புவதே உங்களை அழகாக்கும்.

12.குறைந்த அளவான மேக்கப், பற்களை சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், நகங்கள், பாதங்களை சீராக வைத்துக்கொள்ளுதல், உடையில் கவனமாக இருத்தல், உடலில் மெல்லிய நல்ல நறுமணம் வீசும் வண்ணம் இருத்தல் ஆகியவை பொதுவாக அழகு சேர்க்கும் என்பது உங்களுக்கே தெரியும்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகியவர்கள் கொள்கை ரீதியில் விலகியதாக கூறுகின்றார்கள் உண்மை அதுவல்ல!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்




கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து தான் தீர்மானம் ஒன்றை எடுக்கின்றீர்கள் இதில் ஊடகங்களை பார்க்கால் அரியநேத்திரன் கூறியிருந்தார் அல்லது சிவமோகன் கூறியிருந்தால், சாணக்கியன் கூறியிருந்தார் என்று வருவதில்லையே தமிழரசுக் கட்சியிலே முடிவை எடுக்கார் சுமந்திரன் என்ற சொற்றாடல்கள் எல்லாம் ஏன் ஊடகங்களிலே வருகின்றன?**

பதில் : அது ஊடகங்களில் தான் கூறப்படுகின்றது. முதலாவது தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் தான் சுமந்திரன் அவர்கள். இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக பேச்சாளர் என்ற பதவியே இல்லை இது இரண்டாவது விடயம். என்னவென்றால் த.தே கூட்டமைப்பின் பேச்சாளராக அவர் விடயங்களை கூறுகின்ற பொழுது ஊடகத்திலே அவர்கள் நினைத்தது போன்று எழுப்பிக்கொண்டு இருக்கின்றார்கள். அதை நாங்களும் கட்டுப்படுத்துவதுமில்லை. முரண்பாடுகள் இல்லாத நல்ல கருத்துக்கள் வந்தால் நாங்கள் ஏற்கத்தானே வேண்டும்.

**கேள்வி : தீர்மானத்தை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களினால் எடுக்கின்றார்கள். அப்படி எடுக்கின்ற பொழுது அது எவ்வாறு சாத்தியமாகின்றது?**

பதில் : அவர் நேரடியாக சொல்லுகின்றார் என்னவென்றால் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தனித்தனியாக போட்டியிடுவதற்காக ஒரு ஆலோசனை கூறப்பட்டிருக்கின்றது. அந்த ஆலோசனை எதிர்வரும் 10 ஆம் திகதி பங்காளி கட்சிகளுடன் கூடி எடுக்கின்ற முடிவு தான் தீர்மானமாக வரும் என்று தான் அவர் கூறியிருக்கின்றார். ஆனால் அதை திரிபுபடுத்தி நாங்கள் தீர்மானம் எடுத்ததாகவே கூறப்பட்டது அது பொய் அது அவ்வாறல்ல.

**கேள்வி : இப்பொழுது அவர்கள் அவ்வாறு தானே பிரிந்து நிற்கின்றார்கள்?**

பதில் : அதைத்தானே நாங்களும் சொன்னோம் தனித்தனியாக தேர்தலை கேட்க வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். நான் ஆரம்பத்தில் சொல்லியிருந்தேன் நாங்கள் தனித்தனியாக கேட்டு ஆசனங்களை அதிகம் பெறலாம் என்ற கோரிக்கையை எங்களது பங்காளி கட்சிகள் ஏற்றிருக்கின்றார்கள்.

**கேள்வி : பங்காளி கட்சிகள் ஏற்றுக்கொண்டால் ஏன் ஊடகங்களிலே அவ்வாறு தமிழ் கட்சிகள் எடுக்க முடிவு தவறு என்று யார் அறிக்கை விடுகின்றார்கள்? பைத்தியம் என்றெல்லாம் செல்வம் அடைக்கலநாதன் கூறியிருக்கின்றாரே?**

பதில் : அதை நீங்கள் செல்வம் அடைக்கலநாதனிடம் தான் கேட்க வேண்டும். அல்லது அவ்வாறு கூறியவர்களிடம் கேட்க வேண்டும். நாங்கள் தமிழரசுக் கட்சியில் இருக்கின்றோம் அவ்வாறு கூறவில்லை.

**கேள்வி : அவர்கள் சம்பவம் நடக்காமல் பொய்களை கூறுகின்றார்களா?**

பதில் : நாங்கள் தேர்தலுக்காக எதையும் கதைத்து வாக்களிக்கலாம் சரியோ. நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன் மத்திய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்பது இந்த தேர்தலிலே தனித்தனியாக கேட்டு மக்களின் ஆசனங்களை பெற்று மீண்டும் நாங்கள் ஒன்றாக ஆட்சி அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை தான் நாங்கள் இன்றுவரையும் வைத்துக் கொண்டிருக்கின்றோம். அவர்கள் அதை மாறி அல்லது நாங்கள் பிரித்துவிட்டோம் இலங்கை தமிழரசுக் கட்சி பிரிந்து சென்றுவிட்டது என்று ஏன் இன்றும் கூட அறிக்கை வருகின்றது. த.தே கூட்டமைப்பின் தலைவராக இரா. சம்பந்தன் அவர்களை மாற்றி வேறு ஒருவரை போட வேண்டும் என்று ரெலோ ஊடக பேச்சாளர் கூறுகின்றார் அது அவரின் கருத்து. ஆனால் நாங்கள் கூறுகின்றோம் இன்று வரையும் த.தே.கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் ஐயா தான் இருக்கின்றார். அதை மாற்றுவதா அல்லது வேறு ஒருவரை தீர்மானிப்பதா இடையில் செல்வதா என்பது எல்லாம் தேர்தலுக்கு பின்னர் எடுக்கப்படும் முடிவாக இருக்குமே தவிர தற்பொழுது அந்த முடிவை நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை அது செயற்படுத்தப்படவும் மாட்டாது என்பது தான் எனது கருத்து.

**கேள்வி : நீங்கள் கூறுவதன்படி விகிதாசார தேர்தல் என்பது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் எனவே தான் இவ்வாறு நாங்கள் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது என்பது உங்களது கருத்து அப்படித்தானே?**

பதில் : நான் அப்படி கூறவில்லை விகிதாசார தேர்தல் முறை என்பது மாகாணசபை தேர்தலுக்கும், பாராளுமன்ற தேர்தலுக்கும் தான் இருக்கின்றது. இது கலப்புமுறை தேர்தல் 60 வீதம் வட்டாரத்திலும் 40 வீதம் வாக்களித்தவர்கள் 4.5 வாக்களித்தாலும் சிலவேளை அப்படித்தான் நடக்கும். இது கலப்பு முறை தேர்தல் என்பதனால் இவ்வாறான பல கட்சிகள் போட்டியிடுவதனால் தான் பல கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கின்ற சூழல் இருக்கின்றது அதுதான் விதி. அதற்காகத்தான் பல கட்சிகளில் எங்கள் கட்சிகள் மூன்று இருக்கின்றது தானே இந்த மூன்று கட்சிகளும் கேட்டுவருகின்றபொழுது ஒரு பலமான ஆட்சியை அமைக்கலாம் என்பது தான் இலங்கை தமிழரசுக் கட்சியும் மத்திய குழு கூட்டத்தில் நாங்கள் பேசப்பட்டு ஆலோசிக்கப்பட்ட விடயம். செய்திகள் பல திரிபுபடுத்தப்பட்டு வருகின்றது.

நீங்கள் யாரிடம் கேட்டு சென்றாலும் சிலர் கூறியதே அவ்வாறு திரிபுபடுத்தப்படுகின்றது. நாங்கள் முடிவெடுக்கவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் பங்காளி கட்சிகளை விலக்கி நாங்கள் தனியே கேட்கவேண்டும்எனமுடிவெடுக்கப்படவில்லை தெளிவாக ஒரு ஆலோசனை கூறப்பட்டது. அதிலே 33 பேரும் கருத்தை கூறியிருந்தார்கள் அந்த ஆலோசனையின் அடிப்படையில் அந்த ஆலோசனையை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் பங்காளி கட்சியுடன் கதைத்து தான் இறுதி முடிவு தீர்மானம் என்பதை எங்களிடம் கூறப்பட்டது நாங்கள் அந்த விடயத்தை ஏற்றிருந்தோம்.

**கேள்வி : அப்படியெனில் தவராச அவர்கள் மத்திய குழுவில் இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். இவ்வாறான வரலாற்று துரோகத்தை தமிழரசுக் கட்சி செய்திருக்கின்றது என்று ஜனாதிபதி சட்டத்தரணி கூறியது பொய்யா?**

பதில் : அவர் முடிவை கூறவில்லை. அந்த ஆலோசனை பிழையான ஆலோசனை என்று கூறுகின்றார் என்பதை அவர் கூறினார். அதில் நான் ஒன்றை கூறுகின்றேன் 2018 ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் நின்றவர்களுக்குத் தான் தெரியும் அதில் நடந்த விடயம். இன்னும் களத்தில் இல்லாமல் உதாரணமாக புலம்பெயர்ந்த வெளிநாட்டில் இருந்து பார்க்கின்றபொழுது பிழையான அணுகுமுறையாக தெரியும் அது அவர்களின் பிழை இல்லை.

ஆனால் களத்தில் நாங்கள் 2018 இல் இருந்து இன்றுவரை சந்தித்த கசப்பான சம்பவங்களின் அனுபவ பகிர்வை வைத்து தான் இந்த தேர்தலில் மட்டும் அதாவது நாங்களும் மாறி சொல்லலாம் தானே அவர்கள் தான் வழிவிட்டார்கள் நாங்கள் விடவில்லை என்று. நாங்கள் அப்படியும் கூறவில்லையே என்ன கூறுகின்றோம் இந்த தேர்தலின் உத்திக்காக அவர்கள் தனியே கேட்கின்றார்கள் நாங்கள் தனியே கேட்கின்றோம் அவ்வளவும் தான் இந்த தேர்தலில் நடக்கின்றது பல கருத்துக்கள் எங்களை குழப்புவதற்காக அல்லது மாறுபட்ட கருத்துக்களை கூறுவதற்காக வருகின்றார்கள். தவராசா ஐயா கூறிய கருத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன் அவரின் பார்வையில் அது சரி நான் அவரை பிழையாக பார்க்கவில்லை. ஆனால் களத்திலிருந்து 2018 இல் இருந்து 5 வருடங்களும் நாங்கள் பட்ட அனுபவ பகிர்வின் காரணமாக தான் இந்த முறை நாங்கள் முழுமையாக த.தே.கூ ட்டமைப்பு ஆட்சியை கைப்பற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தநாங்கள்.

ஆகவே த.தே.கூட்டமைப்பில் இருக்கின்ற பங்காளி கட்சிகள் மூன்றும் சேர்ந்தால் ஆசனங்களை அதிகளவில் பெறலாம் என்ற ஒரு விடயம் நாங்கள் அதிலே பார்த்து தான் இதில் சேர்ந்தது. இன்னுமொரு விடயம் ஒருவர் கூறுகின்றார் நீங்கள் பிரிந்துவிட்டீர்கள் ஒற்றுமை இல்லை என்று கூறுகின்றீர்கள் 2 ஆக பிரிந்திருக்கின்றது. நான் கேட்கின்றேன் ஒற்றுமை என்றால் என்ன? த.தே கூட்டமைப்பிலே மூன்று கட்சிகள் இருக்கின்றது தானே அவை பிரியாமல் ஒவ்வொரு வாட்டாரத்திற்கும் ஒரு வேட்பாளரை நியமிப்பதற்கு ஏன் ஒற்றுமை இல்லாமல் போனது அதற்கு என்ன பதில்? நாங்கள் ஏற்கனவே அதையும் கூறியிருந்தோமே வேட்பாளர் தெரிகின்ற பொழுது இந்த பிரதேசம் ஒருவருக்கு இந்த பிரதேசம் இன்னொருவருக்கு என்று பங்கு போட்டு இதிலிருக்கும் தவிசாளர் இந்த கட்சிக்கு பிரதி தவிசாளர் இந்த கட்சிக்கு மேஜர் இந்த கட்சி என்று கூறுவதை விட்டு பொதுவாகவே வேட்பாளர்களை நிறுத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற அந்த சின்னத்துடன் அந்த முகவரியுடன் ஏன் போட்டியிட மற்ற கட்சிகள் தயாராக இருக்கவில்லை. அதைப் பற்றி கதைக்கவில்லையே.

**கேள்வி : ஆம் அந்த கேள்வி எழுப்பப்படுகின்றது தான். நான் தமிழரசுக் கட்சி கூறிய விடயம் தவறு என்று கூறவில்லை அதில் எடுக்கப்பட்ட சில விடயங்கள் திரிபுபடுத்தியிருக்கின்றது என்ற விடயம் உண்மை ஆனால் இதில்விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பு உடைந்து விட்டது என்ற விடயம் முகநூல், ஊடகங்கள் என சகல இடங்களிலும் பரப்பப்பட்டுள்ளது. அவ்வாறு சமூக ஊடகங்கள் வாயிலாக பரப்பப்படுகின்றபொழுது மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்படும் அல்லவா?**

பதில் : நான் பொறுப்பு வாய்ந்த கட்சி ஒன்றில் இருக்கும் பொறுப்பு வாய்ந்த ஊடகவியலாளர் என்ற வகையில் நான் கூறுவது என்னவென்றால் இவ்வாறான கருத்து வரவேண்டும் என பலர் நினைக்கின்றார்கள். எங்களுக்கு எதிராக பல கட்சிகள் இருக்கின்றது. த.தே கூட்டமைப்பை உடைக்க வேண்டும் என்ற சிந்தனை இருக்கின்றது. அவ்வாறானவர்கள் இதையொரு துருப்பு சீட்டாக எடுத்து மேலும் மேலும் மெருகூட்டி எதிர்வரும் தேர்தல் முடிந்ததன் பிற்பாடு கூட இதை பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். நாங்களும் சேரவில்லை அவர்களும் சேரவில்லை இரண்டு பேரும் த.தே.கூட்டமைப்பால் இப்பொழுதும் இருக்கின்றோம்.

**கேள்வி : ஒருவேளை உள்ளூராட்சி மன்றங்களை இந்த DTNA யில் சேர்ந்தவர்கள் ரெலோ புளொட் கைப்பற்றாமல் போனால் தமிழரசுக் கட்சியின் பலம் ஓங்கினால் நீங்கள் அடுத்தகட்ட முடிவை எவ்வாறு எடுப்பீர்கள்?**

பதில் : நிச்சயமாக என்னைப் பொறுத்தவரையில் நாங்கள் பலம் கூடி அவர்கள் பலம் குறைந்தாலும் சரி அல்லது அவர்கள் பலம் கூடி நாங்கள் பலம் குறைந்தாலும் சரி இரண்டு பேரும் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு இலங்கை தமிழரசுக் கட்சி தயாராக இருக்கின்றது அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் நாங்கள் ஒரு கட்சி ஒரு முடிவு தற்பொழுது அவர்கள் பல கட்சி சேர்ந்திருக்கின்றது பல கட்சிகள் என்னும் பொழுது தீர்மானம் எடுக்கக்கூடிய முடிவு எந்த கட்சியில் இருக்கின்றது என்று எனக்கு தெரியாது பல கட்சிகள் இருக்கின்ற பொழுது அவர்களும் நியாயமாக சிந்திக்கக்கூடியவர்களும் இருக்கின்றார்கள். நிச்சயமாக த.தே.கூட்டமைப்பு தொடர்ந்தும் பயணிக்க வேண்டும் என்ற சிந்தனை அந்த கட்சியில் இருப்பவர்களுக்கும் இருக்கின்றது எங்களது கட்சியில் இருப்பவர்களுக்கும் இருக்கின்றது. ஆகவே நாங்கள் தொடர்ந்து பயணிப்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அதைத்தான் நான் சொல்ல வருகின்றேன். தேர்தலுக்கு பின்னர் பல மாற்றங்கள் ஏற்படலாம் எனவே நாங்கள் நிச்சயமாக அதில் தொடர்ந்தும் பயணிக்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கின்றது. பயணிக்க வேண்டும் என்ற நிலைமை எங்கள் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் இருக்கின்றது. நாங்கள் தெளிவாக பல இடங்களிலே கூறியிருக்கின்றோம் பிரச்சாரங்களிலே. எந்த பிரச்சாரங்களிலும் கட்சிகளை அல்லது தனி நபர்களை தாக்கி நாங்கள் பிரச்சாரம் செய்ய கூடாது என்பதில் தெளிவாக கூறியிருக்கின்றோம். பிரச்சாரங்களிலே எல்லோரும் ஒரு மனதில் இருப்பார்களா என்பது எங்களுக்கு தெரியாது ஆனால் நாங்கள் மிகவும் கவனமாக இந்த தேர்தலை ஜனநாயக தேர்தலாக மற்றவர்களை குழப்பாமல் சண்டையிடாமல் மாற்றுக்கருத்துக்களையும் மதித்து நாங்கள் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

**நேர்காணல் : இரணியன்**



# துருக்கி, சிரியா: பேரதிர்ச்சி தந்த பேரவலம்!

கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கும் சுமார் 4 வயது மதிக்கத்தக்க அந்த சிறுவன் தனது கண்களை மெல்லத் திறந்து பார்க்கிறான். மீட்புப் பணியாளர்கள் அவனுக்கு தண்ணீர் போத்தல் மூடியில் நிரப்பி சொட்டுச் சொட்டாக நீரைப் பருக்குகிறார்கள். "மகனே கண்ணைத் திறந்து பாருங்கள். எங்களைத் தெரிகிறதா?" என்ற கேள்விகளுக்கு அவன் 'ஆம்' என பதில் அளிக்கிறான்.

கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தவாறே குழந்தையைப் பிரசவித்த தாயின் அலறலைக் கேட்ட மீட்புப் பணியாளர்கள் உடனடியாக அந்த இடத்திலிருந்த கற்களை அகற்றி குழந்தையை முதலில் மீட்டெடுத்து அம்பியூலன்ஸ் வண்டியில் ஏற்றுகிறார்கள். ஆனால் தமது குழந்தையைக் காண தாயும் தந்தையும் உயிருடன் இல்லை.

15 வயதான தனது மகளின் சடலம் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கிறது. அவளது வலது கை மட்டுமே வெளியில் தெரிகிறது. அவளது விரல்களை இறுகப் பற்றியவாறே அடிக்கும் குளிரையும் பொருட்படுத்தாது மீட்புப் பணியாளர்கள் வரும் வரை காத்திருக்கிறார் அவளது தந்தை.

அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். அவரும் அவரது மனைவி, மகள், சகோதரி, பேரப் பிள்ளை என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்து விட்டார்கள்.

ஏழு மாடிக் கட்டிடம் ஒன்று முற்றாக இடிந்து வீழ்ந்த நிலையில், அதன் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த முழுக் குடும்பத்தையும் உயிருடன் மீட்டு வந்து அம்பியூலன்சில் ஏற்றுகிறார்கள் மீட்புப் பணியாளர்கள். முழுக் கிராமமுமே கூடி நின்று அல்லாஹ் அக்பர் எனக் கோஷமெழுப்பி மகிழ்ச்சியை வெளிப் படுத்துகிறார்கள்.

இவை துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் கடந்த திங்கட் கிழமை ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சியின் பின்னரான காட்சிகள். நாட்டின் தென் பகுதிகளை முற்றாக அழித்த பாரிய நிலநடுக்கத்தில் உயிர் பிழைத்தவர்களை மீட்பதற்கான தேடுதல் தொடர்ந்துவரும் நிலையில், துருக்கி மக்கள் அனைவரும் அதிசயங்கள் நிகழ வேண்டும், இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கும் ஆயிரக் கணக்கானோர் பாதுகாப்பாக மீட்கப்பட வேண்டும் என பிரார்த்தித்து வருகிறார்கள். ஆனால் அப் பகுதியில் தொடரும் கடும் மழை மற்றும் பனிப்பொழிவு என்பன மீட்புப் பணிக்கு பாரிய தடையாக உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. சிரியாவில் பூகம்பம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 42 ஆயிரத்தை கடந்துள்ளது. துருக்கி மற்றும் சிரியா நாடுகளின் எல்லை பகுதிகளில் கடந்த 6 ஆம் திகதி அதிகாலை சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. துருக்கி காசியான்டெப் மாகாணத்தில் உள்ள நூர்டகிக்கு கிழக்கே 23 கி.மீ. தொலைவில் 24.1 கி.மீ. ஆழத்தில் பூகம்பம் தாக்கியது. ரிச்டர் அளவுகோலில் 7.8 ஆக பதிவான இந்த பூகம்பம் எதிரொலியாக துருக்கி, சிரியாவின் எல்லை நகரங்களில் கட்டிடங்கள் குலுங்கின. இந்த பூகம்பம் இஸ்ரேல், லெபனான், எகிப்து நாட்டின் கெய்ரோ நகரம் உள்ளிட்ட அண்டை நாட்டு பகுதிகளிலும் உணரப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 100-க்கும் மேற்பட்ட பூகம்பமும் ஏற்பட்டது. பூகம்ப பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இரு நாடுகளிலும் மொத்த உயிரிழப்பு 42 ஆயிரம் எட்டியுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி துருக்கியில் 36,187 பேரும், சிரியாவில் 5,800 பேரும் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கட்டிட இடிபாடுகளில் சிக்கியுள்ள நபர்களை தேடும் பணி தொடர்வதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. இதனிடையே 200 மணிநேரத்திற்கு பின்னர் இடிபாடுகளில் இருந்து மக்கள் மீட்கப்பட்ட சம்பவங்களும் காணப்படுகின்றன. இதனால், இன்னும் மக்கள் உயிருடன் இருப்பதற்கான சாத்தியம் எழுகிறது. அவர்களை தேடி கண்டறியும் பணியும் நடைபெற்று வருகிறது. சிரியாவில் பூமி அதிர்ச்சி ஏற்பட்ட பகுதியில் ஏற்கனவே போர் இடம்பெற்று வருகிறது. அங்கு இலட்சக்கணக்கான மக்கள் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் நிலநடுக்கத்திற்கு முன் பிருந்தே, உறைய வைக்கும் குளிர், கொலரா தொற்று நோய், மோசமான உட்கட்டமைப்பு ஆகியவற்றால் அம் மக்கள் பாதிக்கப்பட் டிருந்தனர். இந்த நிலநடுக்கம் அவர்களை மேலும் எதிர்கொள்ள முடியாத சவால் களுக்குள் தள்ளியுள்ளது.

கடும் குளிர், மழை, அத்தோடு மின்சாரமோ, எரிபொருளோ இல்லாத நிலை காரணமாக மீட்புப்பணிகள் தாமதமடைந்துள்ளதாக களத்திலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இரவு நேரங்களில் மீட்புப் பணிகள் தாமதமடைவதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது. உயிர் பிழைத்துள்ள மக்கள் இடிந்து வீழ்ந்துள்ள கட்டிடங்களின் இடிபாடுகளை இயலுமானவரை அகற்றி சிக்கியுள்ள உற வினர்களையும், அயலவர்களையும் தேடிக் கொண்டிருக்கும் பரிதாப நிலையினை காணக் கூடியதாக இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிராந்தி யங்களிலுள்ள மக் களில் பலர் தங்குவதற்கு இடமின்றி வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள தமது கார்களில் இரவுப் பொழுதினைக் கழித்து வருகின்றனர். இப்பூமியதிர்ச்சியினால் துருக்கியிலும், சிரியா விலும் பல்லாயிரக்கணக்கான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளதுடன், குடியி ருப்புக் கட்டிடங்கள், மருத்துவமனைகள், அரச நிறுவனங்கள் தரைமட்டமாகியதனால் மக்கள் தங்குவதற்கு இடமின்றி நிர்க்கதியாகி யுள்ளனர். மீட்பு நடவடிக்கைகளில் 24,400 மீட்புப் பணியாளர்கள் ஈடுப டுத்தப்பட்டுள்ளனர். அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, ரஷ்யா, இந்தியா, ஜப்பான், ஈராக், அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை, கிரேக்கம் உட்பட பல நாடுகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சர்வதேச உதவிகளை அனுப்ப முன்வந்துள்ளன. மேலும் ஐக்கிய நாடுகள் சபையும், ஐரோப்பிய ஒன்றியமும் உதவிகளை வழங்குவதில் விரைந்து செயற்படுகின்றன. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட 10 மாகாணங் களில் அடுத்த மூன்று மாதங்களுக்கு அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளதாக துருக்கி அதிபர் ரஜப் தையிப் அர்துகான் தெரிவித் துள்ளார். துருக்கியின் வரலாற்றில் சுமார் 80 வருடங்களுக்குப் பிறகு இவ்வாறாதொரு பாரிய அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட் டுள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்த அர்துகான் மீட்புப் பணிகளை பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். உலகத்தில் நிலநடுக்கம் அதிகமாக ஏற்படும் நாடுகளுள் ஒன்று துருக்கி.

அந்நாட்டின் வட-மேற்குப் பகுதியில் 1999 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 17,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அதே போன்று, கிழக்கு மாகாணமான எர்ஸின்கன் பகுதியில் 1939ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக் கத்தில் 33,000 பேர் கொல்லப்பட்டனர். தற் போது ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் சைப்ரஸ், லெபனான் மற்றும் இஸ்ரேல் வரை உணரும் வகையில் மிக மோசமானது என ஆய்வா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

துருக்கி ஒரு வார காலத்திற்கு தேசிய துக்கத்தை பிரகடனப்படுத்தியுள்ளதுடன் 5.3 பில்லியன் டொலர் நிதியை அவசர உதவிகளுக் காக ஒதுக்கீடு செய்துள்ளது. அதே நேரத்தில் துருக்கி எயார்லைன்ஸ் 11,000 க்கும் மேற்பட்ட தொண்டுப் பணியாளர்களை நிலநடுக்கம் ஏற் பட்ட பிராந்தியத்திற்கு அழைத்துச் சென்றுள் ளது. அத்துடன் 70க்கும் மேற்பட்ட நாடுகள் இதுவரை மீட்புப் பணியாளர்களையும் நிவா ரண உதவிகளையும் அனுப்ப முன்வந்துள் ளன. பூமியின் மேலடுக்கானது, தட்டுகள் எனப்படும் தனித்தனி பாகங்களாக உள்ளன. ஒவ்வொன்றும் மற்றொன்றை நெருக்கியபடி அமைந்திருக்கின்றன. இந்த அமைப்பு அவ் வப் போது நகருவதற்கு முயற்சி செய்கிறது. ஒரு தட்டு நகர முயற்சிக்கும்போது மற்றொரு தட்டு அதைத் தடுக்கிறது. இதனால் உராய்வு ஏற்படு கிறது. சில நேரங்களில் ஒன்று மற்றொன்றின் மீது மோதி மேற்பரப்பில் அதிர்வை ஏற்படுத்துகி றது. இதைத்தான் ஆய்வாளர்கள் நிலநடுக்கம் என்கிறார்கள். தற்போது துருக்கியில் ஏற்பட்டி ருக்கும் நிலநடுக்கம் அரேபியன் தட்டும் அனத் தோலிய தட்டும் உரசியதால் ஏற்பட்டிருக்கின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# உலக வலம்

## கஞ்சா விளம்பரங்களுக்கு டுவிட்டர் அனுமதி

அமெரிக்காவில் கஞ்சா விளம்பரங்களை அனுமதிக்கும் முதல் சமூக ஊடக தளமாக டுவிட்டர் மாறியுள்ளது. பேஸ்புக்,இன்ஸ்டாகிராம் மற்றும் டிக்டொக் ஆகிய மற்றைய சமூக ஊடகங்களாள் அமெரிக்க கூட்டாட்சியில் கஞ்சா பானை சட்டவிரோதமானது என தெரிவித்திருப்பதால் கஞ்சா விளம்பரங்களுக்கு தடைவிதித்துள்ளன. கஞ்சா நிறுவனங்களுக்கு முறையான உரிமம் இருக்கும் வரை, விளம்பரம் செய்ய அனுமதிப்பதாக ட்விட்டர் தெரிவித்துள்ளது.

மேலும், மிக முக்கியமாக, 21 வயதிற்குட்பட்டவர்களை குறிவைக்க வேண்டாம் என்று டுவிட்டர் தெரிவித்துள்ளது. “இது சட்டப்பூர்வ கஞ்சா விற்பனையாளர்களுக்கு மிகப்பெரிய வெற்றியாகும்” என்று மல்டிஸ்டேட் கஞ்சா மற்றும் மருத்துவ மரிஜுவானா நிறுவனமான கிரெஸ்கோ லேப்ஸ் தெரிவித்துள்ளது.







## துப்பாக்கிச் சூடு நடத்திய 52 வயதான நபர் கைது

அமெரிக்காவைச் சேர்ந்த நபர் ஒருவர், தனது முன்னாள் மனைவி உட்பட 6 பேரை சுட்டுக் கொன்றுள்ளார். மிசிசிப்பி மாநிலத்தின் அர்கபுட்லா நகரின் வெள்வேறு இடங்களில் வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூடு நடத்திய 52 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எரிபொருள் நிலையமொன்றில் ஒருவரை சுட்டுக்கொன்ற இந்நபர், பின்னர் அருகிலுள்ள தனது வீடொன்றுக்கு சென்று தனது முன்னாள் மனைவியை கொன்றுள்ளார். அதன்பின் தனது வீட்டுக்குச் சென்று வளர்ப்புத் தந்தையை சுட்டுக் கொன்றார். பின்னர் வேறு மூவரையும் அவர் சுட்டுக்கொன்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## லிபியாவில் படகு கவிழ்ந்ததில் 73 அகதிகள் பலி

லிபியாவில் இருந்து ஐரோப்பா நாடுகளுக்கு கடல் வழியே சென்ற படகு கவிழ்ந்ததில் 73 அகதிகள் பலியாகி உள்ளனர் என ஐ.நா. அமைப்பு உறுதி செய்துள்ளது. ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் வழியே பயணம் மேற்கொள்கின்றனர். இதற்கு லிபியாவை ஒரு மைய புள்ளியாக வைத்துள்ளனர்.

லிபியா நாட்டில் உள்நாட்டு குழப்பம், கிளர்ச்சியாளர்கள் வன்முறை ஆகியவற்றால் ஸ்திர தன்மையற்ற அரசாட்சி காணப்படுகிறது. எண்ணெய் வளமிக்க அந்நாட்டில் இருந்தும் மக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர். இதற்காக அவர்கள் மத்திய தரை கடல் வழியே ஐரோப்பிய நாடுகளுக்கு கப்பல் மற்றும் படகுகள் வழியே அகதிகளாக தப்பி செல்கின்றனர். ஆபத்து நிறைந்த இந்த பயணத்தின்போது, விபத்துகளும் ஏற்படுகின்றன. எனினும், வழியின்றி இதுபோன்ற வெளிநாட்டு பயணத்திற்கு பொதுமக்கள் அதிக முக்கியத்துவம் தருகின்றனர்.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக புறப்பட்டு சென்ற படகு ஒன்று லிபிய கடற்கரை பகுதியில் அன்று கவிழ்ந்துள்ளது.

இந்நிலையில், ஐ.நா.வுக்கான புலம்பெயர்வோர் அமைப்பு அன்று(16) வெளியிட்டு உள்ள செய்தியில், இதுவரை 11 உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. 7 அகதிகள் லிபியா கடற்கரை பகுதிகளில் நீந்தி கரை சேர்ந்து உள்ளனர் என தெரிவித்து உள்ளது. காணாமல் போன 73 அகதிகளும் நீரில் மூழ்கி உயிரிழந்து இருக்க கூடும் என தெரிவித்துள்ளது.



## திருமணச் சான்றிதழைக் கையில் டாட்டூவாக குத்திக்கொண்ட கணவர்

கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி உலகம் முழுவதும் காதலர் தினம் கொண்டாடப் பட்டது. பலரும் தங்கள் இணையர்களுக்கு அன்பை வெளிப்படுத்தும் வகையில் பரிசு பொருட்களை வழங்கி ஆச்சர்யப்படுத்தினர். அந்தவகையில் தாய்லாந்தைச் சேர்ந்த Vall என்ற நபர் காதலர் தினத்தை முன்னிட்டு தன் மனைவி ஆச்சரியப்படும் விதமாகக், கையில் திருமணச் சான்றிதழை டாட்டூவாகக்(tattoo) குத்திக் கொண்டுள்ளார்.

இதனைப் பார்த்த மனைவி ஆச்சர்யத்தில் ஆழ்ந்துள்ளார். தன் மனைவி மீதான காதலை வெளிப்படுத்த 8 மணிநேரம் செலவழித்து இந்த டாட்டூவைக் குத்திக் கொண்டுள்ளார். இதுகுறித்து அந்த டாட்டூ கலைஞர் கூறும் போது, “இதுவரை நான் 8 மணி நேரமெல்லாம் டாட்டு போட்டதே இல்லை. அதிலும் குறிப்பாக திருமணச் சான்றிதழ் எல்லாம் வரைந்ததில்லை. இது முதல் முறை என்பதால் சற்று கடினமாகத்தான் இருந்தது. முழு சான்றிதழையும் சாதாரண மையால் முதலில் அச்சு எடுத்துக்கொண்டு பின் டாட்டூவாக வரைந்தேன்” எனத் தெரிவித்திருக்கிறார். தற்போது இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.





# விளையாட்டு

## பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பீபா ஒரு மில்லியன் டொலர் நிதி உதவி




துருக்கியிலும் சிரியாவிலும் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச கால்பந்தாட்ட சங்கங்களின் சம்மேளன (FIFA) அறக்கட்டளை ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை (இலங்கை நாணயப்படி 366,792,100 ரூபா) நிதி உதவியாக வழங்கவுள்ளது.

துருக்கியிலும் சிரியாவிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதில் பீபா ஒன்றிணைகிறது என்ற கருப்பொருளில் வழங்கப்படும் இந்த நிதி, இரண்டு நாடுகளிலும் உடனடி மனிதாபிமான உதவிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

துருக்கியிலும் சிரியாவிலும் அண்மையில் இடம்பெற்ற பூகம்பத்தினால் 42,000 உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் கடுங்குளிருக்கு மத்தியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்குவதற்கு இடமின்றி தவித்துவருகின்றனர்.

சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற ஸ்தாபனங்களுடன் இணைந்து துருக்கி கால்பந்தாட்ட சங்கம், சிரியா கால்பந்தாட்ட சங்கம் ஆகியவற்றுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர் இந்த நிதி உதவி அளிக்கப்படுகிறது.

இந்த நிதியைக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியமான பொருட்களும் மனிதாபிமான உதவிகளும் வழங்கப்படும். அத்துடன் அவசர மற்றும் தற்காலிக தங்குமிட வசதிகள், பாதுகாப்பு என்பனவும் வழங்கப்படவுள்ளது.

இரண்டு நாடுகளினதும் கால்பந்தாட்ட சங்கங்களுடன் இணைந்து அங்குள்ள நிலைமைகளை பீபா தொடர்ச்சியாக அவதானித்து மேலதிக நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கும்.

சமூகத்தில் நேர்மறையான தன்மைகளை ஏற்படுத்துவதற்கும் திருப்பிச் செலுத்துவதற்கும் பீபா கொண்டுள்ள அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டும் வகையில் 2018ஆம் ஆண்டு பீபா அறக்கட்டளை ஸ்தாபிக்கப்பட்டது.




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 19.02.2023 அன்று வெளியிடப்பட்டது.